2148
3

காந்தீ வழிச் சமயம்

தி. சேஷாத்திரி, எம். ஏ.

தமிழ்நாடு காந்தி நினைவுநிதி
மதுரை-625020

காந்தி வழிச் சமயம்

CONNEMARA PUBLIC LIBRARY
27 JUN 1976
MADRAS

தி. சேஷாத்திரி, எம். ஏ.,

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
மதுரை - 625020

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி வெளியீடு எண் : 167.

நூலின் பெயர்	:	காந்தி வழிச் சமயம்
பொருள்	:	சமயம்
ஆசிரியர்	:	தி. சேஷாத்திரி, எம். ஏ.,
வெளியிட்டோர்	:	தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை-20
அச்சிட்டோர்	:	வெற்றிவேல் பிரிண்டர்ஸ், மதுரை.
பதிப்பு	:	முதற்பதிப்பு பிப்ரவரி 1976.
பிரதிகள்	:	1000
விலை	:	ரூ. 2. 00.

Title	:	GANDHI VAZHI SAMAYAM
Subject	:	Religion.
Auther	:	T. Seshadiri. M. A.,
Publishers	:	Tamil Nad Gandhi Smark Nidhi, Madurai-20.
Printers	:	Vetrivel Printers, Madurai.
Edition	:	First Edition Feb., 1976.
Copies	:	1000
Price	:	Rs. 2.00.

பதிப்புரை

V5

காந்தி அடிகள் இங்கிலாந்தில் இருந்தபோதுதான் முதன் முதலாக பகவத்கீதையைப் படித்தார். பிரம்ம ஞான சங்கத்தாருடன் ஏற்பட்ட தொடர்பு அவருக்கு, கீதையிடத்தில் ஆர்வத்தை ஊட்டியது. பின்னர் ஆப்பிரிக்காவில் வாழ்ந்தபோது கிறித்துவம், இஸ்லாம் ஆகிய சமயங்களைப் பற்றி நன்கு அறிந்தார். ''உன்னுள்ளேயே ஆண்டவன் ராஜ்யம்'' என்ற டால்ஸ்டாயின் நூல் அடிகளின் சமய எண்ணத்திற்குப் புத்தொளி வழங்கிற்று. உலகத்தின் மும்மதங்களையும் தெளிவாக ஓர்ந்து உணர்ந்த காந்தி அடிகள், இந்தியாவின் தலைசிறந்த மன்னரான அசோகரைப் போன்று ஒரு குறிப்பிட்ட சமயத்தை பின்பற்றவில்லை; மாமன்னர் அக்பரைப் போன்று ஒரு புதிய சமயத்தைத் தோற்றுவிக்கவில்லை. மாருக, அவர் சமயத்தையும் அரசியலையும் இணைத்தார். சமயம் அரசியலை ஆண்டால், நாட்டை ஆள்வோர் தமக்கொரு நீதி, சமூகத்திற்கு ஒரு நீதி என்று பிரிக்கமாட்டார்கள் என்பதைத் தமது வாழ்க்கையின் மூலம் விளக்கினுர். அவர் சமயம், ''மூடநம்பிக்கையுடன் போராடிய சமயமல்ல! பகைமைகளையும் போராட்டங்களையும் அடிப்படையாகக் கொண்ட சமயமும் அல்ல. ஆனுல் சகிப்புத் தன்மையை அடிப்படையாகக் கொண்ட அகில உலக சமயமாகும்.''

இந்நூலை காந்திய நூல்களின் வழிநின்று எழுதித் தந்த பேராசிரியர் திரு தி. சேஷாத்திரி, எம். ஏ., அவர்களுக்கு எமது நன்றி. காந்தி சிந்தனைக் கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும், தேர்வுக்கு மட்டுமன்றி வாழ்க்கைக்கும் பயன்படும் இந்நூலை வெளியிடுவதில் காந்திநிதி பெருவகை எய்துகின்றது.

24.2.'76
மதுரை

S. அழகர்சாமி,
செயலாளர்,
தமிழ்நாடு காந்தி நினைவுநிதி.

பொருளடக்கம்

1.	நாகரிகமும் பண்பாடும்	...	1
2.	காந்திஜியின் சமய நம்பிக்கை	...	7
3.	சமயமும் நீதிநெறியும்	...	14
4.	சமயமும் அரசியலும்	...	20
5.	சமயமும் பொருளியலும்	...	27
6.	வாழ்வின் குறிக்கோள்	...	33
7.	காந்தி அடிகளின் சாதனைகள்	...	40
8.	வினைகள்–பயன்கள்–மறுபிறவி	...	50
9.	விரதங்கள்	...	54
10.	வழியும் முடிவும்	...	60
	முடிவுரை		

1 நாகரீகமும் பண்பாடும்

மனிதன் வளர்ந்துகொண்டே வருகிறன். வாழ்வு மேலும் மேலும் வசதியும் வளமும் நிறைவும் இன்பமும் உற நடக்க வேண்டும் என்பதற்காக முயன்று முயன்று அவன்புற உலகில் பல விந்தைகளை நிலைநாட்டிவிட்டான். மேலும் மேலும் முயன்றுகொண்டே இருக்கிறன்.

விஞ்ஞானம் என்கிறன்: பலப்பல உண்மைகளை விண்டு எடுத்துப் பயன்படுத்துகிறன். இந்த உலகம் மட்டுமல்ல மற்ற உலகங்களையும் அடிமை கொள்ளத் தணியாத் தாகம் கொண்டு முன்னேறி வருகிறன்

அந்த முன்னேற்றத்தின் பிரதிபலிப்பு பௌதீகப் பொருள்களைக் கண்டுபிடிப்பதில்மட்டும் இல்லை. ஆனல் அவன் கண்டுள்ள சமூக அமைப்பு, அரசியல் நிர்வாகம் பொருளியல் கட்டுமானம் எல்லாவற்றிலுமே மாற்றமும் திருத்தமும் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன.

இவற்றை எல்லாம் நாகரிகம் என்கிறேம். அதுவும் நாகரீகம் மேற்கேதான் [1]வளர்ந்தது என்றும் நாம் கருதுகிறேம். அதன் நிலையைச் சற்றுப் பார்ப்போம்.

"இன்று ஐரோப்பிய மக்கள் நூறு ஆண்டுகளுக்கு முன்னல் இருந்ததைவிட நேர்த்தியான வீடுகளில் வசிக்கிறார்கள். தொன்மையில் அவர்கள் தோலாடைகளையே அணிந்திருந்தனர். ஈட்டிகளை ஆயுதங்களாகக் கொண்டிருந்தனர். இன்றே நீளமான கால் சட்டைகளை உடுத்து

1 ம. கா. நூல்கள் 1ம் தொகுப்பு. 633ம் பக்கத்திலிருந்து

கின்றனர். தங்கள் உடலை அழகுபடுத்திக்கொள்வதற்காக பலவகையான உடைகளை அணிகிருர்கள். ஈட்டிகளுக்குப் பதிலாக ஐந்து அல்லது அதிகமான தோட்டாக்கள் வைக்கக்கூடிய கைத்துப்பாக்கிகள் வைத்துக்கொள்கின்றனர்... முன்பெல்லாம் ஐரோப்பிய மக்கள் உடலுழைப்பைக் கொண்டே உழுதுவந்தார்கள். இப்பொழுதோ பெரும் பரப்பான நிலத்தை நீராவி இயந்திரத்தைக்கொண்டு உழுது ஒரு மனிதன் பெருநிதி திரட்டிவிடலாம். முன்பெல்லாம் ஒரு சிலரே உயர்ந்த நூல்கள் எழுதினர். இப்பொழுதோ எவரும் எதையும் எழுதி அச்சடித்து மக்கள் மனதில் விஷத்தைப் புகட்டிவிடுகின்றனர். அக்காலத்தில் வண்டிகளில் பிரயாணம் செய்துவந்தனர். இன்றோ நானூறுக்கும் அதிகமான மைல் வேகத்தில் ரெயிலில் போகிருர்கள். ஆகாயத்தில் பறக்கிருர்கள்... மனிதன் தன் கைகளையும் கால்களையும் உபயோகிக்க வேண்டியதில்லை. ஒரு பித்தானை அழுத்திஞல் போதும். அவர்களுக்கு வேண்டிய ஆடைகள் பக்கத்தில் வந்து நிற்கும்...எல்லாவற்றையும் இயந்திரமே செய்துவிடும்...முன்னெல்லாம் உடல்பலத்தைக்கொண்டு கட்டாயப்படுத்தி மனிதர் அடிமையாக்கப்பட்டனர். இப்பொழுதோ பணம், பணத்திஞல் வாங்கக் கூடிய ஆடம்பர வாழ்க்கை ஆசையைக் காட்டி அடிமைகளாக்கப்படுகின்றனர். மக்கள் கனவில் கூடக் கண்டறியாத நோய்களெல்லாம் இப்பொழுது இருக்கின்றன. இந்நோய்களுக்குப் பரிகாரங்களைக் கண்டு பிடிக்க ஒரு பட்டாளமே போல் டாக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்...''

இவ்விதமே பெரிய, பெரிய கட்டடங்கள் எல்லை மீறி வளர்ந்து நோய்க்கும் தீயசெயல்களுக்கும் பணச் செலவுக்கும் இருப்பிடமாக இருக்கும் நகரங்கள், மக்களை ஆடு மாடு போல் நடத்தும் இயந்திரங்கள் கொண்ட தொழிற்சாலைகள், கல்லூரிகள், நீதி நிலையங்கள்,

சட்ட சபைகள், காவல் நிலையங்கள் இவை எல்லாம் நாகரிகங்களின் அடையாளங்கள். இவை எல்லாம் மேல் நாடுகளிலிருந்து நமக்குக் கிடைத்தவை.

இந்த நாகரிக வளர்ச்சியின் அடிப்படைப் பண்பாடு என்ன? அதாவது எந்த 'மனப்பாங்கு' அல்லது விருப்பம் இதற்கெல்லாம் ஆதார சுருதியாக இருந்திருக்கிறது?

'இதில் வாழ்கின்றவர்கள் உடலின்பம் ஒன்றையே வாழ்க்கையின் லட்சியமாகக் கருதுகிறார்கள்'[1] என்பதில் தான் இதன் உண்மையான பரிட்சை இருக்கிறது.

நாகரிகம் மனிதன் வளர்ச்சிக்கு அடிகோல வேண்டும் என்றால் நாகரிகம் விளைவிக்கும் பொருள்கள் அவன் உள் வளர்ச்சியையும், ஆன்ம முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்ட மனப்பாங்குடன் உழைத்துப் பெறப்பட்ட அடையாளப் பொருள்களாக இருத்தல்வேண்டும். அது மனிதனுக்கு உள்ள உடலின் ஆற்றல்கள், மனதின் நல் உணர்ச்சிகள் அறிவின் நல்லியல்புகள் இவற்றிற்கெல்லாம் ஊட்டம் தரவேண்டும். அவற்றிலிருந்து பிறந்தவையாக இருக்க வேண்டும். அந்நல்லியல்புகளை வளர்க்க வேண்டும். இவை ஒன்றுமே அவ்விதம் இல்லை என்பது அடிகளின் உறுதியான கருத்து. இதை இன்னும் தெளிவாக்க அவர் நம் நாகரிகத்தில் மேம்பாட்டை பக்கத்தில் வைத்துக் காட்டுகிறார்.

'... அமைதியற்றதோர் பறவையே மனம் என்பதைக் காண்கிறோம். அதிகம் கிடைக்கக் கிடைக்க அது மேலும் அவாவுகிறது. அப்போதும் திருப்தி அடையாமல் இருக்கிறது. ஆசாபாசங்களில் உழல உழல அவை எல்லையற்றுப் பெருகிக் கொண்டே போகின்றன. ஆகவே நம் மூதாதைகள் நாம் அப்படிப் போகத்தில் உழல்வதற்கு ஒரு வரம்பைக் கோரியிருக்கின்றனர். கோடிக்கணக்கான

1 634; ◇ 667;

வர்கள் எப்போதும் ஏழையாகவே இருப்பார்கள். இவற்றை எல்லாம் கவனித்தே நம் மூதாதைகள் ஆடம்பரங்களும் இன்பங்களும் வேண்டாம் என்று நமக்கு உபதேசித்தனர். நம் சுதேசப்படிப்பு முன்னால் இருந்ததைப் போன்றே இப்போதும் இருக்கிறது. உயிரையே சிதைத்துக் கொள்ளும் போட்டிமுறை நமக்குக் கிடையாது. அவரவர் தங்கள் தொழில்களையோ வியாபாரத்தையோ கவனித்து வருகின்றனர். கட்டுப்பாடுள்ள ஊதியமும் பெறுகின்றனர்.

மேலை நாகரிகம் கடவுளைப் புறக்கணிக்கிறது. இந்திய நாகரிகம் கடவுள் நம்பிக்கையை அடிப்படை-யாகக் கொண்டது. [1]அந்த நாகரிகத்தால் முற்றிலும் மதவிரோதிகள் ஆகி விடுகிறார்கள் மக்கள்.

இங்கே நாம் ஒன்று கவனிக்க வேண்டி உள்ளது. இது 1909ம் ஆண்டில் காந்தி அடிகள் சொன்னது. அன்றி-லிருந்து இன்று வரை காந்தியடிகளின் கருத்தின் அடிப்-படைக்கு ஒன்றும் ஊறு நேரவில்லை. அதாவது நாகரிகம் 'மதத்துக்கு எதிராக, ஒழுக்கத்தைச் சிதைத்துக் கொண்டு வளர்ந்து கொண்டு வருகிறது'. அது மட்டுமல்ல அதைப் போலி நாகரிகம் என்று கொண்டால் அந்தப் போலி நாகரிகம் இன்று நம் உண்மை நாகரிகத்தையும் கபளீ-கரம் செய்து கொண்டு ஊழி வெள்ளம் போல் எங்கும் பரவி விட்டிருக்கிறது. எல்லோருமே அதில் மூழ்கித் திண்டாடு-கிறார்கள். அந்தத் திண்டாட்டத்தை மறக்க எண்ணி மது பானம், மருந்து வகை, பறப்பும் ஓட்டமும் கொண்ட வேகம், பலாத்கார நிறுவனங்கள், சண்டைகள், இவற்-றைப் பரிகாரமென நம்பி இன்னும் அவதிக்குள்ளாகிறார்கள்

---

1 1. 644

இதற்கு வழி என்ன?

இனி அவற்றை எல்லாம் நிறுத்த முடியும் என்று தோன்றவில்லை. எனவே நாகரிகத்திற்கு அடிப்படை-யான பண்பாட்டைச் சீரமைத்து வேகமாக வளர்த்துக் கொண்டால் ஒருகால் அவற்றின் தீமைகளிலிருந்து தப்பலாமல்லவா?

அதற்கு உதவ காந்தியடிகளின் கருத்தைக் கவனிக்க-லாம். 'நாகரிகம் என்பதற்குக் குஜராத்தியில் நன்னடத்-தை என்று பொருள்' நம் எல்லா மொழிகளிலுமே அது தான் பொருள். குறளில் கூட நயத்தக்க நாகரிகம் வேண்டு-பவர் பெயக் கண்டும் நஞ்சு உண்டு அமைவர் என்று வருகிறது. எனவே,

'கடமையின் மார்க்கத்தைக் காட்டும் ஒழுக்க முறை-யே' நாகரிகம் என்ற கருத்தைக் கவனத்தில் கொள்வோம்.

''ஒழுக்கம் என்பது நம் மனத்தையும் விருப்பங்களையும் அடக்கி ஆள்வதே'' என்று புரிந்து கொள்வோம்.

நாகரிகம் ஒழுக்கத்தைப் பற்றியோ மதத்தைப் பற்றி-யோ அக்கறை கொள்ளாதிருக்கும் போக்கை மாற்றி சமயப் பண்பாட்டின் மேல் அமைத்து வளர்ப்போம்.

இறைவனை அறிவதற்கு எனவே நமக்கு அறிவு தரப்பட்டிருக்கிறது. அதை படைத்தவனை மறுக்கப்பயன் படுத்தி அவன் வெறுப்புக்கு இலக்காகும் செயல்களில் ஈடுபடாமல் நலம் செய்யும் எந்தச் செயலையும் அவனைக் கண்டு அவன் ஒளியை ஓங்கி வீசிடச் செய்யும் முயற்சி-யாக ஆக்குவோம்.

அப்படிச் செய்தால்-மிகவும் கடினம்தான்— என்றாலும் நாகரிகத்துக்கு இன்று கிடைத்திருக்கும் கோர உருவத்-

திலிருந்து அதைக்காத்து அதை மக்களுக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள பாலமாக்கலாம். நாகரிகம் உலகுக்கு உதவும் ஒரு முன்னேற்றமாக அமையும்; மனிதன் சிறக்கலாம்.

ஒரே சொல்லில் சொல்ல வேண்டும் என்றால் பண்பாட்டுக்குச் சமய அடிப்படையும் நாகரிகத்துக்குப் பண்பாடாகிற அடிப்படையும் கிடைத்துவிட்டால் நாகரிகத்துக்கு நல்ல காலம் கிட்டிவிடும். அது வளரும் திசை, முறை எல்லாமே நன்கமைந்துவிடும்.

2 காந்திஜியின் சமய நம்பிக்கை

ஒருவனுடைய சமயம் அவன் உணர்வில் பிறந்து அறிவில் வளர்ந்து நம்பிக்கையில் நிலைகொண்டு செயல்களில் ஒளி வீசி பழக்க வழக்கங்களில் மணம் காட்டும்.

சமய உணர்வு: சமயஉணர்வு கடவுள் என்ற ஒரு பேராற்றலையும் அவனுக்கு மனிதன் அடங்கி நடக்க வேண்டியதேவை யுணர்ச்சியையும் கொடுக்கிறது. அதனாலேயே சமயம் என்பது கடவுள் கொள்கை என்றும் பேசப்படுகிறது.

சமய அறிவு: சூழ்நிலை, பழகும் மனிதர்கள், சாத்திரப் படிப்பு இவற்றின் மூலமும் சிந்தனையின் முலமும் பரந்து விரிந்து சமயக் கொள்கைகளை அறிவு உறுதிப்படுத்திக் கொடுக்கிறது.

சயமநம்பிக்கை: இவற்றிலிருந்து கிடைத்த உறுதியில் நிலைத்து நின்று மனித வாழ்வுக்குத் திசையும் போக்கும், அர்த்தமும் ஆற்றலும், தைரியமும் தெளிவும் கொடுத்து நற்கதிக்கு அழைத்துச் செல்கிறது.

நற்கதி என்பது படைத்த ஆண்டவனிடம் சென்று சேர்வதுதான். அதையே விடு பெறுதல் என்றும் கைலாயம் அல்லது வைகுண்டம் சேர்தல் என்றும் இறைவன் பத-மடைதல் என்றும் (அத்வைதிகளால்) மோக்ஷம் பெறுதல் என்றும் சொல்லப்படுவது.

சமய உணர்வுக்கு உரு பிறகு தான் கிடைக்கிறது. அது நம்பிக்கையாக மாறும் போதும் உணர்வாக இருக்-

கும் போதும் விளக்கத்திற்கு வராது. ஆனல் இடைப்பட்ட வளர்ச்சியில்தான் அதை அவ்விதம் மாற்றுகிற கூறுகள் பற்றி விளக்கமாகப் பேசப்பட முடியும்.

ஆகவே காந்தியடிகள் சமய உணர்வு எவ்விதம் எதெதனல் ஊட்டம் பெற்றுத்தன் முழு உருவைப் பெற்றது என்று கவனிப்போம். அதற்கு முன் காந்தியடிகளின் சமயத்துக்கு என்ன பெயர் என்பதையும் நிர்ணயிக்க வேண்டும்.

அடிகள் மதம் என்று சொல்லும் போது 'எல்லா மதங்களுக்கும் அடிப்படையான மதத்தைப் பற்றியே எண்ணுகிறேன்' என்று சொன்ன போதிலும் வெளிப்படையாகவே தன்னை ஒரு ஹிந்து, சநாதனி ஹிந்து என்று சொல்லிக் கொள்ளத்தயங்கவில்லை. 'நீங்கள் கிறிஸ்தவர்களாகி விடுங்கள்' என்று அழைக்கப்பட்ட போதும் கூட அவர் ஹிந்துவாயிருப்பதிலிருந்து மாறுவதற்கு எந்தத் தேவையையும் உணரவில்லை. எனவே அவர் மதம் ஹிந்து மதம். ஆனல் அவர் ஹிந்து மதம் என்று சொல்வது அடிப்படையானது. தனித் தனி குழுக்களும், பிரிவுகளும் ஏற்படுத்திய முண்டுகளுக்கும் முரடுகளுக்கும் அதில் இடமே இல்லை. அவர் ஹிந்து மதம் உலகில் உள்ள எந்த மதமும் 'இதுவும் அது தான்' என்று தன்னினமாகவே எண்ணுகின்ற அளவுக்குப் பரந்து நிற்கும் அமைப்பு. அது 'தார்மிக உணர்ச்சிக்கோ ஆன்மீக வளர்ச்சிக்கோ முரணுக' இல்லாத ஹிந்து மதம்.

இந்த நிலையை அவர் அடைய உதவியவை எந்தச் சூழ்நிலைகள். யார் யாருடைய சேர்க்கைகள், என்று காண்போம்.

குடும்பம்: அவர் பிறந்த குடும்பம் சமயப்பற்று உடைய குடும்பம். தந்தை அடிக்கடி கோயில்களுக்குப் போவார்

சமயப்பிரசங்கங்களைக் கேட்பார். கடைசிக் காலத்தில் கீதை படித்துப் பாராயணம் செய்யத் தொடங்கினார்.

தாயார்: சமய உணர்வில் ஊறியவர். சமயப் பண்பாட்டுக்கு முக்கியமாகக் கருதப்படும், இறைவழிபாடு, கோவிலுக்குப் போதல், நோன்புகள் நோற்றல் இவைகளில் மிகவும் அக்கரை காட்டி உடலையும் வருத்தி வாழ்ந்தவர் அவர்.

''முக்கியமாக அவருடைய தவ ஒழுக்கமே எனக்கு நினைவுக்கு வருகிறது. பூஜையை முடிக்காமல் சாப்பிட மாட்டார். விஷ்ணு கோயிலுக்குப் போய் வருவது நித்தியக் கடமை. சாதுர் மாஸ விரதம் போன்ற கடுமையான விரதங்களை எளிதாக மேற்கொண்டு விடுவார். ஒரு முறை சாந்திராயண விரதத்தின்போது நோயிருந்தும் விரதத்தை முடித்தார். ஒருநாள் ஒரு வேளை ஆகாரம். ஒன்று விட்டு ஒருநாள் உபவாசம் ... ஒரு சாதுர் மாஸக் காலத்தில சூரியன் தரிசனம் செய்யாமல் சாப்பிடுவதில்லை என்று விரதம் பூண்டு விட்டார். சூரியன் அவர் பார்க்க முடியவில்லை என்றால் நான் இன்று சாப்பிடுவதை பகவான் விரும்பவில்லை என்று சொல்லிவிட்டு இருந்து விடுவார்'' என்று நினைவு கூறுகிறார் காந்திஜி.

செவிலித்தாய்: ரம்பா என்ற பெண்மணி காந்தியடிகளை மிகவும் நேசித்து வளர்த்தவர். படிப்பில்லாதவர் என்றாலும் கடவுளை நம்பியவர். பேர் சொல்லிக் கூப்பிட்டால் எந்த விதமும் வந்து உதவி செய்துவிடுவார் என்று அனுபவம் கண்டவர். அவர் தாம் 'இருட்டில் போகப் பயப்பட்ட காந்தியடிகளுக்கு 'ராம நாமத்தைச் சொல்லிக் கொடுத்தவர். *'கோவிலிருந்து அவர் பெறமுடியாமல்

---

3. 52.

போனதை இந்தச் செவிலித்தாயிடமிருந்து தான் பெற்ற-தாக காந்திஜி சொல்கிருர்.

லதா மகாராஜ்: இவர் தந்தைக்காக ராமாயணம் படித்துவந்தார். அவருக்கு இருந்த குஷ்டநோய் பக்தி-யாலும், வில்வ இலை வைத்துக் கட்டியதாலும் இராமா-யணம் படித்ததாலும் தீர்ந்ததாகச் சொல்வார்கள்.

அட்டர்னி ஏ. டபிள்யூ பேக்கர்: அவர் மத சம்பந்த-மான பிரசங்கங்களும் செய்து வந்தார். அவர் மீண்டும் மீண்டும் ''கிறிஸ்தவ சமயம் ஒன்றே எல்லாவற்றிலும் சிறந்தது. ஏசுநாதர் ஒருவரே கடவுளின் திருக்குமாரர். அவரே மனித வர்க்கத்தின் ரக்ஷகர் என்று ஏற்றுக்கொள்-ளாதவர் நிரந்தரமான சாந்தியை அடையவே முடி-யாது'' என்று வாதித்தவர். அவர் பகல் ஒரு மணிக்கு மற்ற ஊழியர்களுடன் கூடி வழக்கமாகச் செய்யும் பிரார்த்-தனைக் கூட்டத்துக்குக் காந்தியடிகளையும் அழைத்துச்-சென்ருர்.

ஸ்ரீ கோட்ஸ்: இவர் அந்தக்குழுவைச் சேர்ந்தவர். அவர் காந்தியடிகளுக்குப் பல கிறித்துவ நூல்களைக் கொடுத்துப் படிக்கச் செய்தார்.

பிளிமத் சகோதரர்கள்: ''ஏசு நம் எல்லாத்தவறுகளை-யுமே ஏற்றுக் கொண்டு நம்மை இஷ்டப்படி நடக்க உதவு-கிருர்'' என்ற வகையில் பொருள்படும்படி காந்தியடி-களிடம் சொன்னவர்.

ராஜசந்திர பாய்: இவர் தான் காந்தி அடிகளின் உறுதியான சமய நம்பிக்கை, கோட்பாடுகளுக்கு ஆணி-வேராய் நின்ற கருத்துக்களைக் கொடுத்தவர்.

பேச்சர் ஜீ சுவாமி: முதலில் மோத் வணிகராயிருந்து பிறகு ஜைன சந்நியாசியானவர். இவருக்கெதிரில்தான்

காந்திஜி தன் தாயாரிடம் பிரசித்தி வாய்ந்த அந்த மூன்று விரதங்களை இங்கிலாந்து செல்லும்போது ஏற்றுக் கொண்டார்.

காந்தியடிகளின் சமய வாழ்வை உருவாக்கிய நூல்கள்:

ராமாயணம் : பதின்மூன்றும் வயதில் லதா மகாராஜ் தன் தந்தைக்கு வாசித்துக் காட்டும்போது கேட்டு ராமாயணத்தினிடம் அவருக்கு ஆழ்ந்த பக்தி ஏற்பட்டது. "பக்தி நூல்களில் எல்லாம் தலையான நூல் துளஸிதாஸரின் ராமாயணமே என்று நான் கருதுகிறேன்" என்று கூறுகிறார் அடிகள்,

பாகவதம் : ஒவ்வொரு ஏகாதசி தினத்தன்றும் படிக்கப்பட்டது. 'பாகவதம் சமய உணர்ச்சியை உண்டாக்கவல்ல நூல்', அதை அடிகள் தீவிரமாக சிரத்தையுடன் குஜராத்தி மொழியில் படித்திருக்கிறார்.

பஞ்சீகரணம், மணிரத்னமாலை, யோகவாசிஷ்டத்தின் முமுட்சுப் பிரகரணம், ஹரிபத்ர சூரியின் ஷட் தரிசன சமுச்சயம் இவை ராய்சந்திரபாயி அனுப்பியவை. அவற்றிலிருந்து காந்தியடிகளுக்கு ஹிந்து மதத்தின் மிகச் சிறந்த ஆன்மஞானமும், தயை ஒழுக்கம் முதலிய கருத்துக்களும் கிடைத்தன.

ஆசியஜோதி : இங்கிலாந்தில் படித்து வந்தபோது பிரமஞான சபையினராக இருந்த இரண்டு சகோதரர்களுடன் பரிச்சயம் ஏற்பட்டது. அவர்கள் சொன்னதன் பேரில் எட்வின் ஆர்னல்ட் எழுதிய ஆசிய ஜோதி, மாடம் பிளாவட்ஸ்கி எழுதிய 'பிரமஞானத்தின் திறவுகோல்' ஸ்ரீமதி பெஸண்டு எழுதிய "நான் பிரமஞான சங்கத்தில் சேர்ந்தது ஏன்?" ஆகிய நூல்களைப் படித்தார்.

மேலும் ஹிந்து மதத்தைப்பற்றி அறிய ஆவல் தூண்டப்படவே பல நூல்களை வாசித்தார். அவர் படித்த நூல்களுள் சில வருமாறு :

நர்மதா சங்கர் எழுதிய தர்ம விசாரணை; மாக்ஸ் முலர்; இந்தியா - அது நமக்கு என்ன போதிக்க முடியும்? விவேகாநந்தர்; ராஜயோகம்; பதஞ்சலி: யோக சூத்திரம் எம் என் த்விவேதி : ராஜயோகம், இவை தவிர பிரமஞான சங்கத்தினர் வெளியிட்டிருக்கும் உபநிஷதங்களின் மொழி பெயர்ப்புக்களையும் படித்தார்.

பகவத்கீதை : ராமாயணம் போல் இது மகாத்மாவை மிகவும் கவர்ந்தநூல். அவர் அதைத் தாய் என்னும் இருளில் ஒளி காட்டிய நூல் என்றும் பலவாறு போற்றி-யிருக்கிறார். பிரார்த்தனையின் போது ''ஸ்திதப்ரக்ஞதரிசன சுலோகங்களைப் பாராயணம் செய்ததிலிருந்தும் அடிக்கடி அதிலிருந்து சுலோகங்களை மேற்கோள்கள் காட்டிப் பேசியதிலிருந்தும் அது அவர் வாழ்க்கையில் எவ்வளவு தூரம் ஊடுருவியிருந்தது என்று புரிந்து கொள்ள முடிகிறது. அனுசக்தி யோகம் என்ற ஒரு சிறிய விளக்கத்துடன் கூடிய மொழி பெயர்ப்பையும் எழுதியிருக்-கிறார்.

மற்ற மத நூல்கள் : பைபிள், டால்ஸ்டாய் எழுதிய 'சுவிசேஷங்களின் சுருக்கம் - செய்ய வேண்டியது யாது? ஆண்டவன் ராஜ்யம் உன் உள்ளேயே இருக்கிறது: டாக்டர் பார்க்கர் எழுதிய வியாக்யானம்; பியர்சன் எழுதிய நிச்சயமான ருசுக்கள்; பட்லர்; உபமானங்கள் எட்வர்ட் மெயிட்லண்டும் அன்னு கிராஸ்போர்டும் எழுதிய பரிபூர்ணமான வழி-முதலியன கிறிஸ்தவ மதத்தைப்பற்றி அறிந்து கொள்ள அவர் படித்த நூல்கள்.

அதே போல் கார்லைல் எழுதிய வீரர்களும் வீர வழிபாடும், ஸேல்ஸ் எழுதிய குரான்: மொழி பெயர்ப்பு

முதலிய நூல்களிலிருந்து முகமது நபி, அவர் பெருமை, அவர் மதத்தின் அடிப்படையைத் தெரிந்து கொண்டார்.

அவர் சமய நம்பிக்கையில் கலந்த பல கூறுகள்:

முதலில் வைஷ்ணவக் குடும்பத்தில் பிறந்ததால் அந்த சம்பிரதாயத்துக்குரிய கருத்துக்களும் பழக்க வழக்கங்களும் அவரிடம் இருந்தன. துளஸி மணிமாலை கூட அணிந்திருந்தார்.

ஆனால் வீட்டில் சிவன் கோவிலுக்குப் போகும் பழக்கம் இருந்ததால் சிவ வைஷ்ணவத்வேஷம் மாறி சமய சமரஸ உணர்ச்சிக்கு வித்துஇடப்பட்டது.

பார்ஸிகள், ஜைனர்கள், முஸ்லிம் கனவான்களுக்கு அவர் குடும்பத்துடன் உறவிருந்தபடியாலும் அவர்களுக்கும் அந்தக் குடும்பத்தினருக்கும் ஒருவருக்கொருவர் மரியாதை இருந்தபடியாலும் அவர் சமய சமரஸ உணர்ச்சி விரிவடைந்து வந்தது. ஆனால் இளம் வயதில் அவர் கேட்ட கிறிஸ்தவப் பாதிரிமார்களின் பிரசங்கங்கள் அவர் உள்ளத்தில் அந்த மதத்துக்கு எதிரான மனப்பாங்கை ஏற்படுத்தியிருந்தது.

பிறகு இங்கிலாந்தில் நல்ல கிருஸ்தவப் பாதிரி ஒருவருடன் பரிச்சயம் ஏற்பட்டபோது அவர் பேசிய பேச்சுக்களிலிருந்தும் பிறகு படித்த நூல்களிலிருந்தும் அவருக்கு அந்த வெறுப்பு மாறி அதனிடம் மரியாதை ஏற்பட்டது. இப்போது அது சர்வ சமய சமரஸமாக மாறத் தொடங்கியது.

தென் ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட பேக்கர், கோட்ஸ் போன்ற நண்பர்களுடன் தொடர்பு அதிகமாக அதிகமாக இந்த சர்வசமய சமரஸம் உறுதிப்பட்டது.

அந்த உறுதியின் உரம்கொண்டு அவருடைய ஹிந்து மத நம்பிக்கையும் ஆழ்ந்து வேர்விட்டு உறுதிகொண்டது.

அவருடைய சமரஸ உணர்ச்சி ஹிந்து மதத்திலேயே உள்ள பல முரண்பாடான கருத்துக்களேயும் தன் உள்ளடக்கும் ஆற்றல் படைத்ததாக ஆயிற்று.

எனவே காந்தியடிகளின் சமயம் சர்வமத சமரஸப் பாங்கு கொண்டதும் எல்லா மதங்களுக்கும் அடிப்படையான உணர்வை வலுப்படுத்துவதுமான ஹிந்து மதமாகும்.

3 சமயமும் நீதி நெறியும்

சமயத்தின் கதை மனதிற்கு அமைதி ஊட்டுவதாயிற்று. சரித்திரம் சமயத்தின் பேரால் நிகழ்ந்த கொடுமையான சம்பவங்களை விவரிக்கிறது. அதே போல சமயம் தனக்குள்ளேயும் பிணக்கும் கொண்டு தேசிய வாழ்வையே சீர்குலைத்திருக்கிறது. அது மட்டும் அல்ல அது மக்களியே பிளவுக்கும் மனித வாழ்வின் சீர்கேட்டுககும் கூடக் காரணமானது போல் காட்சி அளிக்கிறது.

மேலும் அது நீதி நெறி முறைகளுக்கும் முரண்பாடான தர்மத்தைப் போதிப்பதாகவும் காணப்படுகிறது. இக்குற்றச்சாட்டுகளின் உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நீதிமுறைகள் என்ன?

சுருக்கமாகச் சொன்னல் அது அன்பு, உண்மை, நேர்மையை வலியுறுத்தி அவை மிளிரும்படியான வாழ்க்கைக்கு உரிய விதிகளே. இவற்றை சமயங்கள் போதிக்கின்றன, உண்மைதான்: ஆனல் சமயத்தின் பேரால் நடந்த போர்கள், நடக்கும் கோரச்செயல்கள்?............ காந்தியடிகளின் சமய அறிவு இதற்கு என்ன பதில் சொல்கிறது என்பதை ஹிந்த் ஸ்வராஜ் எனும் நூலில் பின்வரும் மேற்கோளின் மூலம் காணலாம்.

* வாசகர்: மதத்தின் பெயரால் ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டனர். கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களுடன் போரிட்டுக் கொண்டனர். ஒரு பாவமும் அறியாத ஆயிரக்கணக்கானவர்கள் கொலையுண்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் உயிருடன் எரிக்கப்பட்டுச் சித்திரவதையும் செய்யப்பட்டனர். நிச்சயமாக எந்த நாகரீகத்தையும் விட இது படுமோசமானதாகும்.

ஆசிரியர் (காந்தி): மேலே சொன்ன கொடுமைகள் நாகரீகத்தால் ஏற்படும் கொடுமைகளைவிடச் சகித்துக் கொள்ளக் கூடியவை என்று நான் நிச்சயமாய்த் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் எடுத்துக் காட்டிய கொடுமைகள் மதத்தின் பெயரால் செய்யப்பட்டன என்றாலும் அவை மதத்தைச் சேர்ந்தவை அல்ல என்பதை எவருமே உணருகின்றனர். ஆகையால் இக்கொடுமைகளுக்குப் பின் விளைவுகள் எதும் இல்லை.

அதற்காக மதத்தின் இந்தக் குணத்தை அவர் ஆதரிக்கிறார், அல்லது இன்றியமையாதது என்று விட்டு விடுகிறார் என்பதில்லை.

மதத்தில் இருக்கும் மூடநம்பிக்கைகளால்தான் இது நேரிடுகிறது. நாகரீகத்துடன் ஒப்பிடும்போது அது அவ்வளவு தீமை வாய்ந்ததல்ல என்று சொன்னரே ஒழிய *''மூடநம்பிக்கை தொடர்ந்து இருந்து கொண்டுதான் வரவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அத்துடன் முழுமூச்சுடன் போராடி அதை ஒழித்தேயாகவேண்டும். ஆனல் மதத்தை அவமதிப்பதனுல் அதைச் செய்ய முடி-

---

* 1. 644

1- 640.

யாது. மதத்தை மதித்து அதைப் பாதுகாப்பதன் மூலமே அதைச் செய்யமுடியும்.''

இப்படிப் பொதுவான மதங்களின் பேச்சை விட்டு ஹிந்து மதத்தை மட்டுமே எடுத்துக் கொள்ளலாம். அதில் மூட நம்பிக்கைகள் தர்ம விரோத நெறிகள் மலிந்-துள்ளனவா இல்லையா என்று கேட்கலாம். குறிப்பாக சில சமூகப் பழக்க வழக்கங்கள் ஹிந்து மதத்தின் பெயரால் நிலவி வருகின்றன. சாதி முறையால் வந்த ஏற்றத் தாழ்வு உணர்ச்சி, அதன் விளைவான தீண்டாமை உணர்வு பெண்களை மட்டமாக நினைக்கின்ற போக்கு, இளம் வயதில் விவாகம், பலதாரம் கொள்ளும் வழக்கம், கடவுளின் பெயரைத் திரையாக வைத்து நடத்தும் தவறான செயல்கள், கடவுளின் கருணையை தவறைக் காக்கும் மருந்தாகக் கருதுதல், மிருகப்பலி இவையும் இன்னோரன்ன பிறவும் ஹிந்துமதத்தில் காணப்படு-கின்றனவே அவற்றைப்பற்றி என்ன சொல்வது?

முதன்முதலில் இவை ஹிந்து மதத்தில் காணப்படு-கின்றன என்பதனால் அவை ஹிந்து மதத்துக்கு உரியவை என்று கொள்ளமுடியாது. மனிதன் நாகரீக மோகத்தில் கற்றுக்கொண்ட தீய போக்குகளுக்கு போர்வையிட்டு சமூகத்தில் தங்கள் செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்ள மதத்தைப் பயன்படுத்திக் கொண்டான். அதற்கு மத நிறுவனங்கள் உதவின; அந் நிறுவனங்களின் அதிபதிகள் உதவினர் அவ்வளவே. எனவேதான் காந்தி அடிகள் ஹிந்து மதத்தை அதன் பாசங்களிலிருந்தும் அதன்மேல் ஒட்டிப் பரவியிருந்த பூச்சி வலைகளிலிருந்தும் பிரித்து எடுத்து சுத்தமாக்கிப் பயன் கொண்டார்.

சமயத்தை, மூடநம்பிக்கைகள், சமயவெறி, பிறரைச் சுரண்ட உபயோகிக்கும் போக்கு இவற்றிலிருந்து பிரித்து இனம் கண்டு கொள்ளக் கற்றுக்கொடுத்தவர்

விவேகானந்தருக்குப் பிறகு காந்தியடிகள்தாம். பழக்க வழக்கங்கள் எல்லாம் மதத்தினர்களைச் சாருமே தவிர மதத்தைச் சாராது.

"நான் சமயம் என்று கூறும் போது ஹிந்து சமயத்தினரின் பழக்கவழக்கங்களையோ அல்லது அவர்கள் சமய நிறுவனங்களையோ கருதிச் சொல்வதில்லை." என்று தெளிவாகக் கூறியுள்ளார் அவர்.

உள்ளபடி 'ஹிந்து' மதத்துக்கு அந்தப்பேர் கிடையாது. அதற்குச் சநாதன தர்மம் அல்லது வேததர்மம் என்றுதான் பெயர். தர்மம் என்றால் நன்னெறி என்று பொருள். எனவே ஹிந்து தர்மம் நீதிநெறிக்குப் புறம்பானதல்ல.

[1] "ஹிந்து மதம் தார்மிக உணர்ச்சிக்கோ, ஆன்மிக வளர்ச்சிக்கோ முரணாக இல்லை. இருந்தால் நிராகரித்திருப்பேன்." இது அவருடைய முத்திரையிட்ட கருத்து.

[2] "நான் ஏன் ஹிந்துவாக இருக்கிறேன்" என்பதற்கு விடையாகச் சுருக்கி அவர்கள் பின்வரும் கருத்துக்களைக் கூறுகிறார்கள்.

பரம்பரையின் செல்வாக்கில் எனக்கு நம்பிக்கை உண்டு. நான் ஒரு ஹிந்து குடும்பத்தில் பிறந்ததால் ஹிந்துவாக இருந்துவருகிறேன்.

அது தார்மிக உணர்ச்சிக்கோ ஆன்மீக வளர்ச்சிக்கோ முரணாக இல்லை. இருந்தால் நிராகரித்திருப்பேன்.

---

1) 10-558.

2) 10-559.

3) ஹிந்து சமயம் ஒன்றுதான் அதிக சகிப்புத் தன்மை வாய்ந்ததென்று அறிந்து கொண்டிருக்கிறேன்.

4) ஹிந்து சமயம் தனித்து நிற்க விரும்பும் ஒரு மதம் அல்ல. ஹிந்து சமயவாதிகள் மற்ற எல்லா சமயங்களுக்கும் மரியாதை காட்டுவதுடன் மற்ற சமயங்களைப் போற்றவும் அவற்றில் உள்ள நல்ல அம்சங்களை எல்லாம் எடுத்துக் கொள்ளவும் ஹிந்து சமயம் இடம் கொடுக்கிறது.

5) ஹிந்து சமயத்தில்தான் அகிம்சையின் மஹோன்னதமான உதாரணங்களைக் காணமுடியும் அஹிம்சை நடைமுறையிலும் அனுஷ்டிக்கப்படுகிறது. (யாகங்களில் பிராணிகள் பலி கொடுக்கப்பட்டன என்று சொல்லுவதை அவர் நம்பவில்லை. அச்சொற்களுக்கு வேறு பொருள்கள் இருக்கவேண்டும் என்று சொல்கிறார். அந்தத்துறையில் சிறந்த ஆராய்ச்சி நூல் ஒன்று தற்சமயம் வெளிவந்திருக்கிறது. ''பிரரசின் பாரத் மேம் கோ பாம்ஸ்'' என்று இதன் தமிழாக்கம் S. மகாலிங்கம் B.A. ஆல் செய்யப்பட்டு தக்ஷிண பாரத ஹிந்தி பிரசார சபை தமிழ்நாடு திருச்சிராப்பள்ளி மூலம் வெளியிடப்பட்டிருக்கிறது. அது மாமிசம் சாப்பிட்ட கருத்தை நல்ல ஆதாரங்கள் காட்டி இல்லை என்று விளக்குகிறது.

6) மானிடர் மாத்திரமல்ல; உலகில் வாழும் உயிர்ப் பிராணிகள் யாவுமே ஒன்று என்பதை அது நம்பி எல்லா உயிர்களுமே புனிதமானவை என்பதையும் அது செயலில் காட்டுவதாக இருக்கிறது.

7) அந்த நம்பிக்கையின் நேரடிப்பயனே மறு ஜன்மத்தில் மகத்தான நம்பிக்கை.

8) சத்தியத்தை இடைவிடாது தேடி ''வருணாசிரம-தர்மத்தைப் பெற்றது அந்த மதம் தான்.

எனவே ஹிந்து சமயம் அன்பு, உண்மை, நேர்மைக்கு மாறான 'அதார்மிக'த் தீநெறி காட்டும் பண்புகளைக் கொண்டிருக்க முடியாது என்பது அவர் உறுதி.

பகுத்தறிவுக்குப் புறம்பான எதையுமே ஒப்புக் கொள்ள மறுத்த அவர் நல்ல திடகாத்திரமானதும் அழகு வாய்ந்ததுமான பகுத்தறிவு காட்டும் நன்னெறியை எப்படி மறந்து வாழமுடியும்? அதைக்கொண்டு சோதித்த பிறகுதான் ஹிந்து மதத்தை ஏற்றுக்கொண்டேன் என்று துணிவுடன் கூறும் அவர் அதற்கு மாறாக அந்த மதத்தின் மேல் படிந்துள்ள மாசுகளைத் துடைக்கவும் தயங்கவில்லை. அந்தத் தார்மீகத் துணிவும் ஹிந்து மதம் தந்ததே.

'தொடர்ந்து சீர்திருத்தக்காரர்களை உண்டாக்கி வந்திருப்பது' ஹிந்து மதம் ஒன்றுதான் என்று பெருமை-யுடன் பேசும் அவரே அவர்களுள் ஒருவராகத் திகழ்கிறார்.

4 சமயமும் அரசியலும்

''காந்தி அடிகள் சமயத்தையும் அரசியலையும் இணைத்துக் குழப்புகிறார்'' என்று அநேகர் கூறிவந்தனர். காந்திஜியை அரசியல் தலைவராக ஏற்றுக் கொண்டவர்களே அவர் சமயத்தை அரசியலில் கலந்ததை விரும்பவில்லை. பின் சமயவாதிகளைக் கேட்பானேன்? இன்றும் கூட காந்தியடிகளைப்பின் பற்றுகிறோம் என்பவர்களில் பலர் பிறரறிய சமயத் தேவையையும், காந்திஜியின் சமய அடிப்படையும் ஒத்துக் கொள்வதில்லை. அதனால் அவர்களுக்கு அதிக நஷ்டம் ஏற்படுவதாக அதாவது காந்தி அடிகளைப் பூரணமாகப் பின்பற்றுவதற்கு அதை ஒத்துக் கொள்வது மிகவும் தேவை என்பதாகத் தோன்றவில்லை.

காந்தி அடிகளின் அரசியலானது தொண்டு அரசியல்; தன்னை மக்களின் முழுநேர ஊழியனாக மாற்றிக் கொண்ட அரசியல். மனித வாழ்வின் இலக்கை அடைவதற்குப் பாதையாக ஏற்றுக் கொண்ட அரசியல். அதே போல சமயம் என்பது வாழ்க்கையைப் பொருளும் ஆழமும், மகிழ்ச்சியும், நிறைவும் கொண்டதாக ஆக்கிக்கொள்ளவும், பிறகு நற்கதியை அடையச் சாதனமாகவும் ஆக்குவதற்கான விஞ்ஞானம். இவ் இரண்டையும் புரிந்து கொள்ளாதவர்களே இவ்விதம் பேசுகின்றனர். அவர்கள் அரசியலைச் சுயநலம் தேடும் சாதனமாகக் கொள்கிறவர்கள். சமயம் அவர்களுக்குக் கொஞ்சம் இடிக்கவே செய்யும். அரசியல் கருவிதான் முடிவு அல்ல என்ற வகையில் அரசியலில் ஈடுபடாமல் அதுவே எல்லாம் என்று கருதி அரசியலில் செயலாற்றுபவர்களுக்கு சமயத்தின் தேவை புரியவில்லை என்றால் அதிசயம் இல்லை.

நம் நாட்டில் கிருஷ்ண பகவான் உதாரணம் இருக்கிறது. கீதையை உபதேசித்தவரும் அவரே. இந்தியாவின் அன்றைய அரசியலை நிர்ணயித்தவரும் அவரே. அவர் இரண்டையும் தனித்தனி வைக்கவில்லை.

''என் சம்பந்தப்பட்ட வரையில் சமயத் தொடர்பற்ற அரயசில் என்பதே இல்லை'' என்பது காந்திஜியின் கூற்று. அவர் சம்பந்தப்பட்டவரை என்ன? யார்சம்பந்தப்பட்டவரையும் அதேதான். மதங்களுக்குத்தான் சாம்ராஜ்யங்கள் எழும்பின. அவற்றின் காரணமாகவே சாம்ராஜ்யங்கள் அழிந்தன. எனவே மீண்டும் கேள்வி எழும்? பின் ஏன் அரசியலிலிருந்து மதத்தை ஒதுக்கி விட்டு அதன் மூலம் அழிவையும் தவிர்க்கக் கூடாது?

காரணம் இதுதான். சமயத் தொடர்புள்ள அரசியல் நாசம் செய்த போது அரசியல் தன் நாச வேலைகளுக்கு சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டது என்பது தான் உண்மை; சமயம் அரசியலைப் பயன்படுத்திக் கொண்டால் இது தவிர்க்கப்படும். தெளிவாகச் சொன்னால் ஒளியில்லாமல் எந்தச் செயலும் செய்ய முடியாது. அதைப்பயன்படுத்துகிறவன் தவறான காரியத்துக்குப் பயன்கொண்டால் ஒளியை நாமும் ஒதுக்க முடியாது. காந்தி அடிகளின் சமயம் ''மூட நம்பிக்கையுடன் போராடிய சமயமல்ல! துவேஷங்களையும் போராட்டங்களையும் அடிப்படையாகக் கொண்ட சமயமும் அல்ல. ஆனால் சகிப்புத்தன்மையை அடிப்படையாகக் கொண்ட அகில உலக சமயமாகும்''

அரசியலில் ஒழுக்கமும், சகிப்புத் தன்மையும், நேர்மையும் அன்பும் வேண்டாமா? இவை அரசியலில் காணப்படாமலிருக்கிறது என்பது சில நேரங்களில் அல்லது சில

---

* 10. 438.

இடங்களில் உண்மையாக இருக்கலாம். அதனால்தான் அது கெட்டது என்பதிலும் ஐயமில்லை.

*''சிறந்த சமய அடிப்படையின்றேல் அரசியல் கல்வி முற்றிலும் தகுதியற்றதாகி விடும் என்பதே எனது அபிப்பிராயமாகும்'' என்ற அவர் காட்டும் காரணம் அரசியலும் மனிதனால் நடத்தப்படுவதே. அவன் சரியாக இல்லாவிட்டால் சரியான அரசியல் எபபடி உருவாகும் என்பது தான். ''குடித்தனம் நடத்த ஆரோக்கியமான உடல் எதற்கு'' என்று சொல்வது போலாகும் அது.

சமயப்பற்று இல்லாத மனிதன், வேர் இல்லாத மரத்துக்குச் சமமாவான். ஆகையால் சமயத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் வாழ்க்கை அமைப்பே உருவாக்கப்படவேண்டும்''

எனவே மனிதன் தான் வாழ சமயத்தைப் பற்றும்போது வாழ்க்கையின் ஒரு அமிசமாக அல்லது முழுமையாக ஏற்றுக்கொண்ட அரசியலை மட்டும் ஏன் சேருக்க வேண்டும்? நீராடிவிட்டு சேற்றைப் பூசிக்கொள்ள வேண்டுமா? கோவிலுக்குள் தானம் செய்துவிட்டு கோவிலுக்கு வெளியே ஜேப்படி செய்வது என்ன நியாயம்?

அரசியலில் எதுவும் நியாயமாகாது; நியாயமாகக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தியதால்தான் காந்தி அடிகள் அரசியலை சமயத்துக்குள்ளடக்கினார்.

பெரிய பெரிய அரசியல் வாதிகள் சமய அறிவும் சமயச் சடங்குகளில் பற்றும் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் அரசியலில் இவற்றை ஒதுக்கி விடுவார்கள். தனி வாழ்வில் உண்மையும் நேர்மையும்

* 10. 440

அன்பும் பண்பும் கடவுள் பக்தியும் கொண்டு வாழ்ந்த இவர்கள் அரசியலில் பலாத்காரத்தையும் வஞ்சனையையும் ஏற்ருர்கள்; வெறுப்பை வளர்த்தார்கள். கடவுளை ஒதுக்கி வைத்தார்கள். சமயவாதிகள் அரசியலைவிட்டு ஒதுங்கியே வாழ்ந்தார்கள். அவர்களுக்குக் கோவில்களும் சமய மேடைகளும் நீராடக் குளமும் கிடைத்தால் போதும். மற்றபடி அவர்களுக்கு யார் ஆண்டாலும் ஒன்றுதான்! மக்கள் கஷ்டப்பட்டாலும் சரிதான். ''அவர்கள் அதிர்ஷ்டம், அவர்கள் தலையின் எழுத்து'' என்று சொல்லி ஒதுங்கி விடுவார்கள்,

திலகருக்குப் பதில் சொல்லும் வாயிலாக காந்தி அடிகள் முதலில் சொல்லிய அரசியல்வாதிகளைத் திருத்துகிருர்.

அரசியலில் எதுவும் நியாயம் என்று அவர் கருதுகிருர். அரசியல் வாழ்க்கையில் அத்தகைய சித்தாந்தத்தை நான் ஆட்சேபிக்கிறேன். மேல் நாட்டினரின் தந்திரங்களையும் முறைகளையும் நாம் பின்பற்றிஞல், இந்த நாட்டின் அரசியல் வாழ்க்கை முற்றிலும் ஊழல் மயமாகிவிடும் என்பது எனது கருத்தாகும். நேர்மை, நியாயம் தருமம் முதலியவற்றை மிகவும் கண்டிப்பாக அனுசரித்தால்தான் இந்த நாட்டின் உண்மையான நலன்கள் அபிவிருத்தியடைய முடியும் என்பதே எனது நம்பிக்கை.

ஏற்கனவே சொன்னபடி சமயத்தை அரசியலிலும் கொண்டாட வேண்டும் என்ருல் சமயத்துக்குத் தெளிவான வரம்புகள் கட்டிப் பேச வேண்டியிருப்பது போல

:0.43

அரசியலுக்கும் தெளிவான இலக்கணம் கொண்டுவிட வேண்டும். நான் ஏற்கனவே கூறியதுபோல அடிகள் அரசியல் தொண்டு அரசியல்.

* "முதலாவதாக, கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையேதான் எனது அரசியலாகும். எனவே அதிலிருந்து என்னை விடுத்துக்கொள்ள நான் முயலமாட்டேன். அவ்விதம் விடுதலை பெற முயற்சி செய்வது என் ஆயுள் கால லட்சியத்தையும் கடவுளையும் மறுப்பதாகும்." என்பது அவர் அரசியல் விளக்கம்.

அடிகள் அரசியலை வாழ்வின் ஒரு கட்டமாகக் கொண்டிருந்தார். அவர் வாழ்க்கையின் முடிவான இலக்காக சமயம் காட்டும் கொள்கையைக் கொண்டிருந்தபடியால் அரசியலை அவர் தன் வாழ்க்கைப் பாதையின் முதல் பகுதியாகவே நினைத்தார்.

† "எனினும் அந்தத் தேதிக்குப் பிறகு (1947 ஆகஸ்டு 15 எனது அரசியல் அலுவல்கள் வேறு பாதையில் செல்லுவது சாத்தியமே! அது சந்தர்ப்பங்களால் நிச்சயிக்கப்படும்.".

இதைத்தான் அவர் தெளிவாக # எனது அரசியல் உள் வளர்ச்சியையே முக்கியமாகக் கொண்டிருக்கிறது' என்றார். அது சர்வ வியாபகமான இயல்புடையது. எனவேதான் அது வெளி வளர்ச்சிக்கும் காரணமாயிருக்கிறது" என்றார்.

இதைப்புரிந்து கொள்ள அவர் 'அடிப்படையில் சமய, வாதி' என்றே சொல்லலாம். அவர் சமய வளர்ச்சி எந்தத் துறையையும் ஒதுக்காதது. சமயத்தின் காரணமாக அவருக்கு சமூக சேவை தேவையாயிற்று. அதற்கு அரசியல் இடம் தந்தது. எனவே அரசியல் வாதியானார். இதைப்

---

* 1) 10. 441 † 10. 443

† 2) 10. 441.

புரிந்து கொள்ள நாம் இம்மாதிரி சொல்லலாம்: அடிகள் ஆசிரியராகவோ அல்லது வேறு ஒரு தொழிலாளியாக-வோ மட்டும் இருந்திருந்தால் கூட அவர் தன் சமய உள் வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு அந்தத் தொழிலைச் சாதனமாக்கிக் கொண்டிருப்பார்.

காந்திஜியின் அரசியல் கருத்துக்களைப்பற்றி கவனிக்-கும் போது மூன்று விஷயங்கள் நினைவிருக்க வேண்டும். அரசியல் வாதி சமயப்பற்று உடையவனாக இருக்க வேண்டும். அந்த சமயத்துக்கு மிகவும் அடிப்படையான பொருள் இருக்க வேண்டும். ஒழுக்கம் நேர்மையுடன் கடவுள் பற்று மட்டும் உள்ள அளவுக்குத்தான் அந்தச் சமயம் பொதுத் தன்மையுடன் இருக்கும்.

அரசாங்கம் வேறு. அரசியல் வேறு. அரசாங்கத்-துக்கு 'சரித்திர' மதப்பற்று இருத்தல் கூடாது. அப்-போதுதான் * அதில் ஒவ்வொரு தனிநபரும் அரசாங்-கத்தின் தலையீடு இன்றி தமது மனத்திற்குச் சிறந்தது என்று தோன்றும் ஒரு சமயத்தைப் பின்பற்ற உரிமை இருக்கும். சமயத்தைக் கொண்டு அவர்களிடையே சச்சரவு இருக்க நியாயம் இல்லை. எனவே அரசாங்கத்தில் ஈடு-பட்டிருப்பவன் சமயம் அவன் தனிப் பொறுப்பாகிவிடும். இதை இன்னும் தீவிரமாக அவர் சொல்கிறார். † நான் சர்வாதிகாரியாயிருந்தால் சமயமும் அரசாங்கமும் வெவ் வேருகவே இருக்கும்.

சமயப்பற்றும் தேசபக்தியும் தனித்தனியானவை யாக இருக்க முடியும். *ஆனால் ஒன்றுக்காக ஒன்றை விட்டுவிட முடியாது. தேசபக்தி அரசியல் அல்ல. இங்கே சமயம் என்பது ஹிந்து, முஸ்லீம், வைணவம் சைவம்

---

* 10. 455

† 10. 456-18

* 10. 455

என்பது போன்றதும் சரித்திரத்தில் பேசப்படுவதுமான சமயமாகும். தொகுப்பாக காந்தி அடிகள் கருத்தில் அரசியல் வேறு சமயம் வேறு என்று நடந்து கொள்ள வேண்டியதில்லை. அரசியலை சமயமயமாக்குவதுதான் நல்லது. ஆனால் அதை ஹிந்து சமயம் அல்லது முஸ்லீம் சமயமாக்குவது என்று பொருளல்ல. கடவுள் நம்பிக்கை கொண்டு ஒழுக்கம், தர்மம், நேர்மை, உண்மை இவற்றின் வழி அரசியலை நடத்த வேண்டும். அரசியல் தொண்டாக இருந்தால் அதுவும் எல்லாமக்களுக்கும் உரிய தொண்டாயிருந்தால் அப்படித்தான் இருக்க முடியும்.

அதிலிருந்து பிறந்த அடுத்த கருத்து அரசாங்கம் நடத்துபவர்களும் அரசாங்கத்தை ஒரு குறிப்பிட்ட சமயத்தின் அல்லது ஒரு சமயத்தின் குறிப்பிட்ட கடவுள் கொள்கைகளுடன் இணைக்கக்கூடாது. ஆனால் சமய நம்பிக்கைகள் அடிப்படை ஒழுக்கத்தை வளர்க்க வேண்டும். அதிலிருந்து வளர்ந்த மூன்றாவது கருத்து சமயம் தேசபக்திக்கு இடையூறாக ஆகக் கூடாது. அதற்காக சமயத்தை விட்டுவிடவும் கூடாது.

5 சமயமும் பொருளியலும்

பொருளியல் என்பது என்ன ?

சாதாரண மனிதன் புரிந்து கொள்கிற முறையில் அது ரூபாய் சம்பந்தப்பட்ட பிரச்னை. அந்த ரூபாய் அவனுக்கு அடிப்படைத் தேவையான பொருள்கள் உணவு உடை போன்றவை-கிடைப்பதற்கும் மேலே மனமகிழ்ச்சிக்காகக் கிடைக்கிற பொருள்கள்பெறுவதற்கும் உதவியாயிருப்பது.

பொருள்கள் உற்பத்தியாகாமல் கிடைக்கிறதில்லை. எனவே பொருள்கள் உற்பத்தியும் அவற்றின் பங்கீடும் பொருளியலாகும் அந்தச் செயல்களைப்பற்றிய மிகவும் சிக்கலான வழிமுறைகளும் திட்டங்களுமே பொருளியல் என்று பேசப்படுகிறது.

இப்பொருளியல் வளர்ந்துவந்த விதத்தில் இன்று மிகவும் பயங்கரமான ஏற்றத் தாழ்வை ஏற்படுத்தி விட்டது. 'ரூபாய்' என்பது ஒரு பயங்கரமான அலாவுதீன் விளக்காக மாறிவிட்டது. அதை வைத்திருக்கிறவர்கள் மற்ற மக்களின் மீது நேர்முகமாகவோ மறைமுகமாகவோ ஆதிக்கம் செலுத்தி அவர்கள் வாழ்வையே பாழ் செய்ய வல்லவர்களாக ஆகிவிட்டார்கள்.

பொருளியல் நிபுணர்கள் மேல்கூட்டத்தைப் பார்த்து விட்டு மாற்றம் சொல்கிறார்கள். அல்லது அதற்குச் சப்பைக்கட்டுக் கட்டுகிறார்கள். பின்னால் சொன்ன கருத்துக்களைப் பயன்படுத்தி முதலாளிகளும், முன் சொன்ன கருத்துக்களை வேதவாக்காகக் கொண்டு

''தொழிலாளர் தலைவர்களும்'' பிளவுபட்டு நிற்கிறார்கள். இடையில் மனிதத்தன்மை நாசமுறுகிறது. அமைதி குலைகிறது.

அவர்கள், அடிப்படையையே புரிந்துகொண்டு, நல்ல மாற்றத்துக்கு அடிகோலியாக வேண்டும். இன்று பொருளியலின் அடிப்படை 'இதயமற்ற ஒழுக்கத்தை அலட்சியம் செய்யும்' கோட்பாடுகளின்பிடியில் இருக்கிறது. அரசியலில் ''நாம் வெற்றியடைந்து விட்டோமானால் போதும். வழியில் எவ்வளவு சேதம் ஏற்பட்டாலும் சரியே'' என்பது போல பொருளியலிலும் அவரவர் தன் கையில் பணம் சேர்ந்தால் சரி என்று எண்ணி விடுகிறார்கள்.

பணம் என்பது என்ன? அதற்கு ஏன் இவ்வளவு மதிப்பு? பணம் 'மக்களை அடக்கியாள உதவும் சக்தி' அதற்கு உதவுகிற ஒரு கோட்பாடு குறைந்த விலைக்கு வாங்கு; அதிக விலைக்கு விற்றுக் கொள். இதைப் பற்றி ரஸ்கின் எழுதும் போது

* இது நல்ல கூற்று! பூகம்பம் வந்தால் மரம் மலிவாகக் கிடைக்கும். நெருப்புப் பிடித்து ஊர் எரிந்தால் கரி மலிவாகக் கிடைக்கும்! அது சரியான முறையா! என்று கேட்கிறார்.

அதிக விலைக்கு விற்பது என்ற கருத்தை எடுத்துக் கொண்டு, அடுத்த சாப்பாட்டுக்கு இல்லாமல் இருக்கிற பணத்தைக் கொடுத்து வாங்க வைப்பது கூடச் சரியாகி விடும் அல்லவா? கருத்து என்ன?

பொருளியலை அன்பின் அடிப்படையில், பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான்.

* ரஸ்கின் - கடையனுக்கும் கடைத் தேற்றம்

காந்தியடிகளும் இவ்வாறு கருதினர். சமயத்தின் அடிப்படையில் பொருளாதாரம் அமையவேண்டும். அதாவது பொருளியல் சமயத்துக்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டும்.

''அடிகளுக்கு சமயமும் தர்மமும் முரண்பட்டதாக இருந்ததில்லை. எனவே ''உண்மைப் பொருளியல் மிக உயர்ந்த தருமநெறிக்கு என்றுமே எதிராக இயங்கியதில்லை. அதே மாதிரி உண்மை நெறியியல் உண்மையான பொருளியலாகவும் இருக்கும்.''

''பொருளைக் கடவுளாக எண்ணி வழிபடும் முறையை வளர்த்து, பலரைச் சுரண்டி சிலர் பணக்காரர்களாக ஆக உதவும் பொருளியல் பொய்யானதும் மனதுக்கு அச்சத்தை ஊட்டவல்லதுமான சாத்திரமாகும்.''

(ஹரிஜன் 9-10-37 292ம் பக்கம்)

எனவே பொருளியல் எல்லோருக்கும்-மிகவும் எளியவர்களுள்பட-வேண்டிய பொருள்களைக் கொடுக்க வேண்டும். அதாவது ஒவ்வொருவருக்கும் சாதாரண நல்வாழ்வுக்கு, சுய மதிப்புக் குறையாத வாழ்வுக்குத் தேவையான பொருள்கள் தேவையான அளவுக்குக் கிடைத்தாக வேண்டும்.

இதன் மற்றொரு பகுதி: தேவைக்கு மேல் இருக்கக் கூடாது இதைத்தான் சமயம் வலியுறுத்துகிறது.

''புதுக் கண்ணோட்டத்தின்படி, முடிந்ததை எல்லாம் எப்படியாவது சேர்ப்போம் என்ற எண்ணத்தை நிறுத்துவோம்''

எல்லோருக்கும் கிடைக்க முடியாத ஒரு பொருளை நாம் பெற முயற்சி செய்யமாட்டோம்!''

(யங் இந்தியா 3-9-25 304 பக்கம்)

கீதை 'தவாக்கென்று சமைப்பவன் பாபத்தை உண்-கின்றான்' என்று சொல்கிறது. பொருளை தெய்வத்தின் அருளாகப் பெற்று பிறருக்கும் கிடைக்கும்படி செய்வது தான் வேள்வியின் தத்துவம். அதைச் செய்யாதவன் தவறு செய்கிறான் என்று கீதையில் கண்ணன் கூறி-இருக்கிறார்.

இந்த சமய அடிப்படையில் பொருளியலை ஒவ்வொரு-வரும் நோக்கி அதன்படி வாழ்வார்களானால் இப்படி ஏற்றத் தாழ்வு ஏற்படாது என்பது உறுதி. இந்த ஏற்றத் தாழ்வுள்ள நிலைக்கு அரசும் உதவி வருகிறது. ஏன் என்றால் அரசே பலாத்காரத்திலும் அதிகார ஆசையிலும் தான் இயங்கி வருகிறது.

''நான் வேலைக்காரருக்கு உரிய கூலியைக் கொடுத்து விட்டால் பிறகு பெரும் பணம் சேர்க்கவும் வேண்டாத போகப் பொருள்களைக் குவித்துக் கெடவும் வாய்ப்பு கிடைக்காது. அதே போல் உரிய சம்பளம் பெறும் வேலைக்காரரும் தன்னுடன் வேலைசெய்யும் ஊழியர்களிட-மும் சரியாக நடந்து கொள்வான். அப்போது 'தர்ம நதி காய்ந்து போகாமல் பாய்ந்து கொண்டேயிருக்கும்.'

பொருளியல் சுரண்டல் தத்துவமாக மாறுவதற்கு உதவும் காரணங்களில் ஒன்று போட்டி.

போட்டி தேசத்துக்கு நல்லது என்று சொல்லும் பொருளியலில் நிபுணர்கள் கூற்று தவறானது. போட்டி ஏற்றத் தாழ்வை அதிகப்படுத்தி பணக்காரர்களை ஊக்கு-

வித்து ஏழைகளை அமுக்கி தேசத்தையே அழித்து விடும். எனவே பொருளியல் இதயமற்றதாக இருக்கக் கூடாது. மனிதப் பண்பை அலட்சியம் செய்வதாக இருக்கக்கூடாது. அது குவிக்கும் சாத்திரமாக இருக்கக் கூடாது. வனவிலங்கின் சட்டமாக இருக்கக்கூடாது. இவற்றை எல்லாம் சட்டம் செய்ய முடியாமல் பகிர்ந்து கொள்ளச் சொல்லிக் கொடுக்கும் சாஸ்திரமாக இருக்க வேண்டும். முடியாமல் இருக்கும். ஆனால் சமய உணர்வு இருந்தால் இது சாத்தியமாகலாம்.

ஏன் என்றால்

1) *சமயம் உலகியல் பொருள்களைப் பற்றற்றுத் தியாக உணர்வுடன் சுகிக்கச் சொல்கிறது. காந்தியடிகள் ஈசாவாஸ்ய உபநிடதத்தின் முதன் மந்திரத்துக்கு இவ்வளவு மதிப்பும் கொடுத்திருந்தார். அதுவே சோஷலிஸம், கம்யூனிஸத்தின் பலாத்காரமற்ற பயனுக்கு சரியான உபதேசம் என்றார். ஏசு கிறிஸ்துவின் பணக்காரனுக்குச் சொன்ன உபதேசத்திலும் இதே கருத்து ஒளி விடுகிறது.*

2) *சமயம் அன்பையும் பண்பையும் வலியுறுத்துகிறது.*

3) *சமயம் கடவுளை முன் நிறுத்தி சமத்துவத்தை இன்றியமையாததாக்குகிறது.*

4) *சமயம் சேவையில் கடவுளைக் காணும்படி உபதேசிக்கிறது.*

எனவே சமய அடிப்படையுடன் பொருளியல் இயங்கினால் ஏற்படுகிற நிலை கண்டிப்பாய் இவ்வளவு பயங்கரமாய் இராது. இருப்பினும் எல்லோருக்கும் ஒரே மாதிரித் திறமை இருக்காது. அதே போல வாய்ப்புக்

களும் சூழ்நிலைகளும் நம் கட்டுக் கடங்கி நிற்காது. அப்போது சிலரிடம் பொருள்கள் குவிந்து போகலாம். அப்போது என்ன செய்வது?

அதற்குத்தான் அடிகள் தருமகர்த்தா முறையைச் சொன்னார். கோவில்களின் சொத்து தரும சொத்து. அவற்றைப் பரிபாலிப்பவர் என்ன மனப்பாங்குடன் உழைக்கிறார்? அதேபோல பூமி, பொருள் எல்லாமே ஆண்டவன் சொத்துதான். அதைத் தேடும்போதும் பயந்து பயந்து தேடவேண்டும். சேர்ந்துவிட்டாலும் பயந்து பகிர்ந்துகொண்டுவிடவேண்டும்.

அவர் ''ஆண்டவனை'' அரசில் காணவிரும்பவில்லை. அதாவது எல்லாம் அரசின் சொத்தாக்கிவிடலாம் என்பதை அவர் விரும்பவில்லை. இதுவும் நினைவில் இருக்க வேண்டும்.

6 வாழ்வின் குறிக்கோள்

— (கடவுள் ஆன்ம சாக்ஷாத்காரம்)

இதுவரை பொதுவாகவே சமயம்பற்றி பேசப்பட்டது. அங்கங்கே சில முக்கிய அடிப்படைகளும், சமயத்தின் சிறந்த பகுதியும் விவரிக்கப்பட்டும்கூட காந்தியடிகளின் சமயம் விவரமாகப் பேசப்படவில்லை. அதைப்பற்றிச் சொல்லவேண்டிய கருத்துக்களுள் முதன்மை பெறுவது மூன்று.

1) காந்தி அடிகளுக்கு சமயம் வாழ்வின் அடிப்படை என்றால் அதன் குறிக்கோள் என்ன?

2) அவர் பின்பற்றிய சமயம் கடவுளுக்கு என்ன அறிகுறிகள் தருகின்றது?

3) குறிக்கோளை இந்த வாழ்விலே அடைய முடியுமா அல்லது இந்த வாழ்வு வழியாக இருக்க அடுத்த பிறவியிலோ அல்லது இறந்தபிறகுதான் அடைய முடியுமா?

இந்த வாழ்வு கொடுத்திருப்பது உயிர் பக்தி செய்து தன் மலங்களை நீக்கிக் கொண்டு ஈசன் திருவடி நிழலை அடைந்து பிறவியிலிருந்து விடுதலை பெறவே தான் என்கிறது சைவ சித்தாந்தம்.

விஷ்ணுவிடம் பக்தி செய்து அவனை மகிழ்விக்கும் செயல்களையும் அவன் பக்தர்கள் மகிழும் செயல்களையும் செய்து அவன் ஞானம் அடைந்து பக்தியை திடம் செய்தோ அல்லது சரணாகதி மூலமோ அவன் இருப்பிடமான

வைகுண்டம் சேர்ந்து அவனுக்கே கைங்கர்யம் (ஊழியம்) செய்துகொண்டு இருக்கும் அழிவில்லாப் பெரு நிலையை அடையவேண்டும். அதற்குத் தக்கவாறு நடந்து கொள்வதுதான் வாழ்க்கையின் பொருளும் முடிவும் என்கிறது வைஷ்ணவம்.

அத்வைதமோ இந்த பிரபஞ்சம் மாயை; நம் ஆத்மா தான் பரமாத்மா. இந்த பிரபஞ்ச மாயையை உதறி எறிந்து ஜீவன் முக்தனாகி பிறகு ஆத்மா பரமாத்மாவின் ஐக்யத்தை எய்திவிடவேண்டும் என்கிறது.

''வாழ்வை தெய்வீகமான ஒரு ஒளி என்று நம்புகிறேன். வாழ்வின் லட்சியத்தைப் பூரணமாக அறிந்து கொள்ளவேண்டும் என்ற முயற்சியே என்னை பலத்துடன் வைத்திருக்கிறது. தெய்வீக அமிசமே எல்லா உயிர்களுடையவும் இறுதி நிலையாகும்'' என்றெல்லாம் சொல்லி இவற்றைத் தொடர்ந்து வாழ்வின் லட்சியம் என்ன என்று விளக்கும்போது, காந்திஜீ

''சத்தியத்தைக் காண நான் உறுதி கொண்டிருக்கிறேன். கடவுளை நேருக்கு நேர் காண்பதற்காக நான் எத்தகைய தியாகத்தையும் பெரிதாகக் கருதவில்லை'' என்று தன் வாழ்வின் குறிக்கோளைச்சொன்னார். இதிலிருந்து அவர்கள் வாழ்க்கையின் குறிக்கோள் தெளிவாகிறது, சமயமும் அதைத்தான் சொல்கிறது.

முரண்பட்டவைபோல் தோன்றுகிற அவ்வளவு கருத்துக்களையும் காந்தி அடிகள் ஒத்துக்கொண்டு பேசியிருக்கிறார்.

1 (10-387, 388 2) 10-390

எனவே, அவர் ஆன்ம சாதனையின் முடிவாக மோக்ஷத்தை ஒப்புக்கொண்டார். அதாவது இறப்பு பிறப்பு வட்டத்திலிருந்து விடுபட்டு இந்த ஜீவாத்மாவின் ஜீவநிலை ஒழிய ஆத்மநிலைமட்டும் எஞ்சியிருக்கும் நிலையை ஒத்துக்கொண்டார்.

அது இந்தப் பிறவியிலேயே வருமா? என்று கேட்டுக் கொண்டு அவர் மிஸஸ் போலக்கிடம் பேசும்போது, என் இறப்பு பிறப்பு வட்டத்தை இந்தப் பிறவியுடன் முடித்துக் கொள்ளலாம் என்று எண்ணினேன் ஒரு சமயம். ஆனால் முடியாதுபோல் தோன்றிவிட்டது. மீண்டும் வருவேன். அந்த ஒரு முறையுடனாவது தீர்ந்துவிடும் பிறவி என்று நம்புகிறேன்!' என்றார். அப்படிப் பிறக்கும்போது ஹரிஜனனாக பிறக்கவேண்டும். அப்படிப் பிறந்து பசுவின் கஷ்டங்களைப் போக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்.

பிறவியறுக்க இடைவிடாத உழைப்பு அவசியம் என்று ஒத்துக்கொண்டார் அதற்குக் கடவுளின் அருளும் வேண்டும் என்ற நம் சாஸ்திரங்களின் அறிவுரையையும் பக்தர்களின் கூற்றையும் ஒத்துக்கொண்டார். அது கீதையிலேயே சொல்லப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டினார்.

''நீ கடமையைச் செய். மற்ற எண்ணங்களை விட்டு என்னைச் சரணடை. நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். கவலையுறாதே'' என்பது கண்ணன் உறுதிமொழி.

இதற்கு 'அகந்தை' அழிய வேண்டும் என்கிற உண்மையை அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். தொண்டன் தன்னை சூனியமாக்கிக் கொண்டுவிட வேண்டும் என்று அடிக்கடி சொல்லி வந்தார்.

உண்மையில் அவர் பக்தியுள்ளமும் வேதாந்த அறிவும் கொண்டு தொண்டின் மூலம் கர்ம யோகம் புரிந்த மகாத்மா. எனவேதான் கடவுள், ஜீவவாழ்க்கை, மோக்ஷம் இவற்றைப் பற்றிய யோகிகளும் வேதாந்தி-களும் பக்தர்களும் அவ்வளவுபேருமே பேசிய மொழிகளில் பேசி வந்தார். கூடவே அவர் உலகியல் வாதத்தையும் ஒதுக்காத காரணத்தால் அவ்வளவு பேருடன் சமூக, அரசியல், பொருளாதார, கல்வி சீர்திருத்த வாதியாக எல்லோரும் சேர்ந்த ஒருவராகத் திகழ்ந்தார்.

இவற்றை வைத்துக்கொண்டு அவர் கடவுளுக்குத் தந்த விளக்கங்களைப்பார்க்கலாம்.

*எப்பொருளிலும் வியாபித்துள்ள, விவரிக்கமுடியாத, அறிவுக்கு எட்டாத ஒரு மர்மமான சக்தி இருக்கிறது. அது புலன்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது.

''உயிருள்ள எல்லாவற்றையும் (ஜடப் பொருளுக்கு கூட உயிருண்டு என்பதை இப்போது சர் ஜே. ஸி. போஸின் அற்புதமான ஆராய்ச்சியின் பயனாக நிரூபிக்க முடிந்துவிட்டது)'' ஆளும் சட்டம்தான் கடவுள். சட்டமும் சட்டத்தை விதிப்பவரும் ஒன்றே''.

[1]''இவ்வளவு மாறுதலுக்கு இடையேயும் மாறுதலற்று ஒரு சக்தி......இருக்கிறது. அழிக்கிறது—சிருஷ்டிக்கிறது'' —அச் சக்தி அல்லது தத்துவமே கடவுள். அந்தக் கடவுள் இவர் அல்லது அவர் என்பதா? இது, அது என்று பேசுவதா? இந்தக் குழப்பம் எல்லோருக்கும் உண்டு ஆனால் ஒரு உண்மை தெரிந்தால் அது குழப்பம் இல்லை

---

* 10. 3

1. 10-4 2. 10,18

என்று தெரியும். நான் அது என்று அஃறிணையில் குறிப்பிடும் இரண்டு, மூன்று பொருளை எடுத்துக் கொள்வோம். மேஜை, மாடு, மின்சாரம், இந்த மூன்றிலும் வெளியாகும் பொருள் ஒரே தன்மைத்தானதா? மாட்டைக் கூட அவள் அவன் என்று சொல்கிறோம். மின்சாரமும் மேஜையும் ஒன்றா? அதே போல் சக்தி என்று சொல்லி விட்டதால் அது என்று கூறிவிடும் அஃறிணைப் பொருளா கடவுள் சக்தி?

ஆனால் உருவம் உண்டா. இல்லையா!

"கடவுள் ஒரு நபர் அல்ல. மனித உருவில் வருகிறார் என்பது கூட ஓரளவுக்குத்தான் உண்மை"

எனவே காந்தி அடிகளின் கடவுள் புலன்களுக்கு எட்டாத ஆனால் நம் புலன்களையும் உயிர்கள் அவ்வளவையும் ஆக்கிப் படைத்து அழித்து 'விளையாடும்' ஒரு சக்தியே.

அதையே தன் ஆத்மாவாகவும் காணுவதில் அவருக்கு சிரமம் இருந்ததில்லை. ஆசிரமபஜனவளியில் ஆதி சங்கரர் எழுதிய ஒரு சுலோகம் சேர்ந்திருக்கிறது. அதன் கடைசி இரண்டடிகள் வருமாறு:

யத்ஸவப்ன ஜாகர ஸுஷுப்த மவைதி நித்யம்

தத் ப்ரஹ்ம நிஷ்கலமஹம் ந ச பூத ஸங்க:

இதன் பொருள் கனவு, விழிப்பு, தூக்கம் ஆகிய (மூன்று) நிலைகளை என்றும் அறிகிற பிளவு படாத பிரமமே நான்; இந்தபூதங்களின் சேர்க்கையல்ல". இதைப்பற்றி காந்தி-அடிகள் 'முதலில் இதைக்கேட்டு இதில் தொனிக்கும் அகங்காரத்தைக் கண்டு நான் பதறினேன். சிந்திக்க சிந்திக்க,

நாளைத்துவக்க இதைவிட சிறந்த சங்கல்பம் இருக்க முடியாது என்று உணர்ந்தேன். அடிப்படையில் நாம் எல்லையற்ற உடல்களில் உரைந்து கொண்டு எல்லாவற்றையும் அறியும் 'அந்த இருப்புத் தத்துவமே!'

ஆகவே கடவுளை பிரம்மமாகவும் அதை ஆத்மாவாகவும் புரிந்து கொள்வதில் அவருக்கு இருந்த சிரமம் எல்லாம் நாளாவட்டத்தில் தீர்ந்துவிட்டது.

இந்த ஆத்ம ஸாக்ஷாத்காரமே அவர் குறிக்கோளாக, அதற்கு அந்த வாழ்வையே சரியான முறையில் பயன்படுத்தி (பயன்படுத்திக் கிடைத்திருக்கும் சுதந்திரத்தை நன்கு உபயோகித்து) நற்கதியடைவதுதான் அவர் குறிக்கோள்.

வாழ்வில், இந்த உலகில் அவரை எந்த உருவத்தில் தேடுவது? அவதாரங்களை அவர் முழுமையாக கடவுள் என்று நம்பவில்லை. சிலைகளை அவர் வளர்ச்சியடையாத உள்ளமும் பகுத்தறிவும் உடையவர்களுக்கும் பயன்படும் ஒரு கருவியாகக் கருதினார். பிறகு அவர் கடவுளுக்கு எந்த உருவத்தைக் கொடுத்தார்? அங்கேதான் அவர் தனி மேதையைப் பிரயோகித்தார். உண்மையையே கடவுளாகக் கொண்டார் அவர்.

※ஹிந்து மத நூல்களில் கடவுளுக்கு ஓராயிரம் பெயர்கள் சொல்கிறார்கள். எத்தனை ஜீவஜந்துக்கள் இருக்கின்றனவோ அவ்வளவு பெயர்கள் கடவுளுக்கு இருக்கின்றன. அதனால்தான் கடவுளைப் பெயர் இல்லாதவர் என்று அழைக்கிறோம்

※ 10. 11

''கடவுளுக்கு பல உருவங்கள் உண்டு. பலமொழி-களில் நம்மிடம் பேசுகிருர். எனவே அவரை உருவ-மற்றவர் மௌனி என்றும் இவ்விதமே பலவிதமாகவும் கருதுகிறேம்.

''கடவுள்தான் அன்பு என்று கூறுகிறவர்களிடம் கடவுள் அன்புதான் என்று கூறுவேன். எனினும் கடவுள் சத்தியமே என்று என் உள்ளத்தின் ஆழத்தில் சொல்லிக் கொள்வது வழக்கம். என் சம்பந்தப்பட்டவரையில் சத்தியமே கடவுள் என்று முடிவுக்கு வந்திருக்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன் மேலே சென்று உண்மை (சத்தியம்)தான் கடவுள் என்று கூறினேன்''.

அதிகம் விவரிக்காமல் இதை மட்டும் சொல்லிவிட-லாம் உண்மையை முறைப்படி தேடுங்கள். வாழ்வை அதற்குச் சமர்ப்பணம் செய்துவிடுங்கள்.

''கர்மாவின் மொத்த சாரமே கடவுள்; நேர்மையான-தைச் செய்யும்படி மனிதனை வற்புறுத்துவது கடவுளே. உயிர் வாழும் அனைத்தின் நிறைவே கடவுள்; விதியின் கைப்பொம்மையாக மனிதனை ஆட்டி வைப்பதும் கடவுள் தான். தமக்கு ஏற்பட்ட சோதனைகளை எல்லாம் தாங்கும் சக்தியை 'பிராட்லாவுக்கு[1] அளித்தது கடவுளே. நாத்திக வாதிக்கு மறுப்பாக இருப்பதும் கடவுளேதான். அந்த 'உண்மை, அறிமை, மகிழ்ம்மை' மூன்றுமான கடவுளை நேரில் காணலாம். அதுவே மோக்ஷம்.

வாழ்வு அதற்கு ஒன்று தரப்பட்ட சந்தர்ப்பமே. நீங்கள் விரும்பினல் இந்த ஒரே பிறவியில் அதை அடையலாம். ஆனல் அதற்கு உழைப்பு அதிகம், எதிர்ப்பும் அதிகம். இல்லையென்ருல் ஒவ்வொரு பிறவியை-யும் வரும் பிறவிகளைக் குறைக்கப் பயன்படுத்தி மோக்ஷத்தை சீக்கிரமாக எட்ட முயலுவோம்.

1 பிரசித்தி பெற்ற நாத்திகவாதி

7 காந்தி அடிகளின் சாதனைகள்

வாழ்வை இறுதி லட்சியமான மோக்ஷத்தை நோக்கிச் செலுத்துவதற்கு நம் ஹிந்து மதம் பல சாதனைகளை, வழி முறைகளைக்காட்டித் தந்திருக்கிறது. அவற்றில் சிலவற்றைப்பற்றி காந்தி அடிகள் கொண்டிருந்த கருத்துக்களையும், அவற்றை கடைப்பிடித்த தன்மைகளையும் இந்தப் பகுதியில் காட்ட முயலுகிறோம்.

முதலில் பிரார்த்தனையை எடுத்துக்கொள்வோம். பிரார்த்தனைக் கருத்தின் வளர்ச்சியின் காரணமாக இதில் இரண்டு முக்கிய தன்மைகளைக் காணலாம். ஒன்று கடவுளை வணங்கி வரம் கேட்பது. இதில்கூட அவன் அருளையோ, அவன் காரியமாக நாம் ஈடுபட்டிருக்கும் பணிகளைச் செய்வதற்கு வேண்டிய ஆற்றலையோ தரும் படி கேட்பது முதல் ரகம்; இரண்டாவது ரகம் சுயநலத்தின் பாற்பட்டு ''எனக்கு அது வேண்டும்,'' ''இது வேண்டும்'', என்று கேட்பது.

இரண்டையும்விட மூன்ருவது தரம் ஒன்று இருக்கிறது. அது சற்றுத் தன்னம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. அதாவது மனிதன் தன் தெய்வாம்சம் விளங்க நிற்கும் நேரத்தில் செய்த பிரார்த்தனை. அதில் அவன் கடவுள் ஒத்துழைப்பை வேண்டுவதுபோலிருக்குமே தவிர வரம் கேட்பது போல இராது. பிச்சை கேட்பது நிச்சயமாக இராது. முதல் இரண்டு தன்மைகளையுமே காந்தி அடிகளின் பிரார்த்தனையில் காண்கிறோம்.

*" கடவுளிடமிருந்து பயபக்தியுடன் ஏதாவது கேட்பதே பிரார்த்தனையாகும். கடவுளுடன் ஒன்றிய நிலைமை அடைய கடவுளின் அருளைப்பெற உள்ளத்தின் வேட்கையை வெளியிடுவதே பிரார்த்தனை என்று எனக்குத் தோன்றுகிறது" என்பது அவர் கொடுத்த விளக்கம்.

உபநிடதக் காலப்பிரார்த்தனை ஒன்றைப் பாருங்கள் :

அஸதோ மா ஸத் கமய; தமஸோ மா ஜ்யோதிர் கமய; ம்ருத்யோர் மா அமிர்தம் கமய - பொய்யிலிருந்து உண்மைக்கு அழைத்துச் செல்: இருளிலிருந்து ஒளிக்கு இட்டுச்செல்; சாவிலிருந்து அமரநிலைக்குக் கொண்டுசெல்.

கடவுளை வழிபடுவது என்பது கடவுளின் பெருமையைக் குறித்துத் தோத்திரம் செய்வதுதான்.

† இதை அவர் மதத்தின் ஆன்மாவும் சாரமும் என்று கொண்டார். எனவே மனிதனுடைய வாழ்க்கையின் உயிர் ஸ்தானம் பிராத்தனையாகவே இருக்கவேண்டும். 'அதன் பரந்த அர்த்தத்தில் உள்ளுக்குள் இறைவனுடன் தொடர்பு கொள்ளுவதும் பிரார்த்தனையே.

※ வேண்டிக் கொள்வதாக இருந்தாலும்கூட "ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும்படியும் அதைச் சூழ்ந்துள்ள அறியாமையையும் இருட்படலங்களையும் போக்கும் படியும் வேண்டிக்கொள்வதாகவும் இருக்க வேண்டும்."

இதிலிருந்து அவர் பிரார்த்தனையை எவ்வளவு அவசியம் என்று கருதினார்? எவ்வளவு உயரிய மட்டத்தில் பயன்படுத்தினார்! என்பது விளங்கும்.

பிரார்த்தனைக்கு ஈசனின் நாமங்கள் தேவைப்படும். அதற்கு அவர் ராமன் என்ற பெயரைக் கொண்டார்.

---

* 10-151 † 10-156

※ 10. 156

எந்தப் பெயரையும் எவ்வளவு பெயர்களையும் பயன்படுத்-தலாம் என்பது அவர் கருத்தாகும்.

எவ்வளவு நேரம்? என்று கேட்டோமானல் அதற்கு விடை: அது அவரவர் உள்ளத் தூய்மை உள்ள ஒன்றிப்பு, வேலை முதலியவற்றைப் பொறுத்தது என்ப-தாம். கடவுள் வேலையான மக்கள் தொண்டைச் செய்து கொண்டிருக்கிறவர்கள் அதற்கென்று தனிநேரம் ஒதுக்-காமல் தொண்டையே அவரை எண்ணிச் செய்யலாம் என்பதும் அவர் உபதேசமே.

''பிரார்த்தனையில்லாமல்'' அவர், ''நான் உயிர் வாழவே முடியாது. சாப்பாடு தண்ணீர் கூடஇல்லாமல் இருந்துவிடுவேன்'' என்று சொல்லிவிட்டு ''அதுதான் என்னை என்பணியில் ஊன்றிநிற்கவும், என் உயிர்வாழவும் கூட உதவுகிறது'' என்று கூறியிருக்கிருர்.

6) உண்ணுவிரதம்: ஹிந்து சமயத்தில் உண்ணு விரதத்துக்கு மிகப் பெரிய இடம் உண்டு. உண்ணு விரதமே கடவுள் பிரார்த்தனைதான் என்கின்ற அளவுக்கு உண்ணுவிரதம் காந்திஜியின் வாழ்வில் இடம்பெற்றிருந்-தது.

சாப்பாட்டைக் குறைத்துச் சாப்பிடுவதும் குறிப்பிட்ட நாட்களில் உண்ணுவிரதம் இருப்பதும் உடலுக்கும் நல்லது; மனதுக்கும் நல்லது.

''இது மிகப் பழைமையானதும் மதிப்பு வாய்ந்தது-மான ஒரு ஏற்பாடு. உண்மையான உண்ணு நோன்பு மனதைத் தூய்மைப்படுத்தும்; ஆன்மாவையும் மலம்நீங்கி ஒளிரச் செய்யும். அது உடலை 'சிலுவையிலறைகிறது'; அந்த அளவுக்கு அது ஆன்மாவை விடுதலை அடையச் செய்கிறது''.

இது தனிப்பட்ட ஹிந்து சமய வாழ்வின் ஒரு அம்ச-மாக மக்கள் பிராயச் சித்தமாகவும், கடவுளின்

அருளைப் பெறவும் உடல் நோய் நீங்கவும் நீண்ட நாட்களாகப் பயன்படுத்தி வந்தனர்.

காந்தி வாழ்க்கையிலும் இந்த நோன்பு குடும்பச் சூழ்நிலை, மத வாழ்வின் காரணமாக இடம் பெற்று விட்டது. ஆனால் அதையும் அவர் மற்ற அமிசங்களில் செய்தது போலவே சோதனைக்கும் சிந்தனைக்கும் ஆராய்ச்சிக்கும் உட்படுத்தி பெருமளவில் பயன்படுத்தினார்.

அரசியலில் உண்ணாவிரதத்தைப் பயன்படுத்தினார் அவர். ''அதுவும் பலாத்காரமே!'' என்று அவர் எதிரிகளும், அவரைப் புரிந்து கொள்ளாதவர்களும் வீண்வாதம் பேசியதுண்டு.

அவருக்கு அரசியல் என்றோ சமூகம் என்றோ தனி வாழ்க்கை இருந்ததில்லை. இது கோவிலுக்கு வயிற்றையும் கொண்டு வருகிறானே; கை, கால் போதுமே என்பது போன்ற வாதம். வயிறும் ஒருவன் உடலுடன் கூடியதே. அதே போல இந்த சமய அமிசங்கள் அவன் வாழ்க்கையின் அமிசங்களே. எனவே அவர் உண்ணா விரதங்கள் என்ன காரணத்துக்காக ஏற்பட்டனவோ அவற்றிற்காகத்தான் இருந்தார். அவர் பலாத்காரம் செய்ய எண்ணிச் செய்ததில்லை.

அவர் உண்ணாவிரதம் இருந்தது

1) இறைவனுடன் நெருங்க;

2) வாழ்க்கையைத் தூய்மையாக்கிக் கொள்ள;

3) ஆன்மபலம்பெற;

4) அவசரமாகவும் மக்களை அறியாமலும் தொடங்கிய தவறுகளுக்குப் பிரயாச்சித்தமாக;

5) மக்களின் உள்ளுணர்வைத் தட்டி எழுப்ப;

6) தன் தூய்மையை வேறு வழியின்றி நிரூபிக்க.

இம்மாதிரி மிகச் சிறந்த காரணங்களுக்காகவே அவர் உண்ணுவிரதமிருந்தார்.

அவர் கூறிய சில நிபந்தனைகளை நினைவில் கொள்வது நல்லது.

''விரதம் உண்மையானதாக இருக்க வேண்டும் என்ருல் அதனுடன் தொடர்ந்து தூய்மையான கருத்துக்களைப் பெறத்தயாராக இருத்தல் வேண்டும்; சாத்தானின் தூண்டுதல்களைத் தடுக்கும் உறுதியும் இருக்க வேண்டும்''

'என் சமயம்,' மனதில் நெருக்கடி ஏற்படும் போது, உண்ணு நோன்பிருந்து பிரார்த்தனைசெய் என்று சொல்லிக் கொடுக்கிறது.

மேலும், ஆன்ம வளர்ச்சிக்கு உண்ணுநோன்பு தேவை என்று சொல்லும் அவர், கடவுளுக்கு அஞ்சி வாழ்ந்து அவரை நேருக்கு நேர் காண வேண்டும் என்று விரும்புபவனுக்கு எண்ணம் பேச்சு இவற்றில் கட்டுப்பாடு எவ்வளவு தேவையோ அவ்வளவு தேவை அளவிலும் தரத்திலும் உணவைக் குறைத்துக் கொள்வது, என்கிருர்.

தன் சொந்த விஷயத்தில் இப்படிப் பேசிய அவர் நாட்டைக் கருதும் போது, ''முழுத் திண்டி (Full meal) மனிதன் கடவுள் இருவருக்குமே எதிரே செய்யும் பாவமாகும். ஏன் என்ருல் அவர்கள் தங்கள் அண்டை அயலார்களின் உணவைத் திருடிவிடுகிருர்கள்.'' என்று ஒரு தத்துவத்தை வெளியிடுகிருர்.

கடவுளின் கருணை மருந்தன்ன உணவை எல்லோருக்கும் தயார் செய்து கொடுக்கிறது. உணவு மருந்து

போல் என்ற கருத்துக் குறளிலும் உள்ளது. எனவே அதற்கு மேல் அதைப் பயன் படுத்துவது சரியல்ல.

மனமகிழ்வுக்கு என்று சாப்பிடும் வழக்கம் இருக்கும் வரையில் உண்ணு நோன்பும் இருந்தாக வேண்டும் என்று மற்ரெரு காரணமும் காட்டி மருந்து போல் உணவு, குறைந்த உணவு (அல்பாஹாரம் - இது தான் பலகாரம் என்ருனது) முழு நோன்பு இவற்றை வலியுறுத்துகிருர்.

உயர்ந்த நிலையில் அது சரணகதிக்குத் தொடக்கம் என்ற தன் நம்பிக்கையையும் உறுதியையும் வெளி-யிடுகிருர்.

1913, 1914, 1918, 1919, 1921, 1922, 24, 25, 32, 33, 34, 1939, 1943, 1947, 1948 ஆகிய ஆண்டுகளில் 2 நாட்கள் முதல் 24 நாட்கள் வரை அவர் உண்ணுவிரதமிருந்திருக்-கிருர்.

மௌனம்

எப்படி உடலுக்கும், உடலை அண்டிய மனதுக்கும் உண்ணு நோன்பு தேவையோ, அவ்விதமே பேச்சுக்கும் பேச்சை அண்டிய மனதுக்கும் மௌனம் தேவை. மௌனம் தான் உயரிய தூய்மையான சிந்தனைக்கு உதவும். மனதும் வாயும் இரைச்சல் போட்டுக்கொண்டிருக்கிறவரை நல்ல சிந்தனை கிட்டாது. வாயை நிறுத்தி காதையும் பிறகு நிறுத்தி பிறகு மனதையும் நிறுத்தும்போதுதான் ஆத்மாவின் குரல் கேட்டும்.

மற்ற விஷயங்களைப்பற்றி அவர் எவ்வளவோ பேசியிருக்கிருர். ஆனல் மௌனத்தைப்பற்றி மிகவும் குறைவாகவே பேசியிருக்கிருர். அதுவும் சரி தானே!

இரண்டு மேற்கோள்களை இங்கே எடுத்து எழுது-கிறேன்.

'நீங்கள் விவரிப்பது ஹிந்து சமயம் அல்ல. எங்களிடம் வாருங்கள். உண்மையைத் தெரிவிக்கின்றோம்' என்று குறுகிய இனபுத்தியுள்ளவர்களின் கூட்டம் முணு முணுப்பதை நான் உணர்கிறேன். ''நேதி நேதி''; அதுவல்ல நண்பர்களே அதுவல்ல என்று நான் அவர்களைக் குழப் பத்துக்குள்ளாக்குகிறேன். ஆனால் அவர்கள் இரட்டிப்புக் கோபத்துடன், அதுவல்ல அதுவல்ல என்று சொல்லிக் குழப்பத்தை இன்னம் படுகுழப்பமாக்குகிறார்கள். இருப்-பினும் இன்னம் ஒரு குரல் காதோடு காதாக எனக்குச் சொல்லியது. ''ஏன் இந்தச் சச்சரவு? வாய்ச்சண்டை; இதிலிருந்து விமோசனத்தை நான் காட்ட முடியும். அதற்கு மௌனப் பிரார்த்தனையே வழி.

''மௌனத்தில் ஆழ்ந்து எனது நண்பர்களையும் அவ்-வாறே செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.''

எனவே 'அந்தக் குரலைக்கேட்க' மௌனம் தேவை. ''நாம் சத்தியத்தை நாடுபவர்களாக இருக்கிறோம். எனவே மௌனத்தின் தத்துவம் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். நாடகம் பார்க்கும்போது நாடகத்தில் லயித்து விடுவதனால் மௌனமாக இருப்பது கஷ்டமாகத் தோன்றவில்லை. அப்படி இருக்க கடவுளைப் பிரார்த்தனை செய்வதற்காக நாம் ஏன் ஐந்து நிமிடநேரம் மௌனமாக இருக்கக் கூடாது?''

எனவே பிரார்த்தனை, உண்ணாவிரதம் மௌனம் மூன்றும் ஒரே துறையின் மூன்று அம்சங்களே; அல்லது உண்ணாவிரதமும் மௌனமும் பிரார்த்தனையின் இரண்டு கால்களே என்றும் கொள்ளலாம்.

காந்தி அடிகள் வாரம் ஒரு நாள் முழு மௌனமும், பொதுப் பிரார்த்தனையின்போது மக்களுடன் சேர்ந்து தினந்தோறும் ஐந்து நிமிஷங்களும் மௌனத்தை அனுஷ்டித்து வந்தார்.

உருவ வழிபாடு

இந்த "கடவுள் தேடும் வழியில்" ஹிந்து சமயம் உருவ வழிபாட்டையும் விதித்திருக்கிறது. அதைப்பற்றியும் காந்தி அடிகளின் கருத்துக்கள் அறியத் தக்கனவாகும்.

இந்த உருவ வழி பாட்டை அவர் தமக்குத் தேவை என்று நினைக்கவில்லை. அதற்காக அவர் அதை வேண்டாம் என்று மறுக்கவில்லை.

உண்மையிலேயே மனிதன் மனது உருவகப் படுத்தாமல் எதையும் புரிந்து கொள்ள முடிவதில்லை. ராகங்களைக் கூட உருவகப் படுத்திப் புரிந்து கொள்கிறார்கள். உருவகப்படுத்துவதும் அவ்வளவு எளிதான விஷயம் இல்லை.

* "நாம் எல்லோருமே விக்கிரகங்களை வழிபடுகிறவர்கள் என்பதே எனது அபிப்பிராயமாம்- கோயில்களில் கற்களாலும் உலோகங்களாலும் உருவாக்கப்பட்ட விக்கிரகங்கள் இருக்கின்றன என்பதற்காக நான் ஹிந்து சமயத்தில் யாதொரு வேற்றுமையையும் காணவில்லை. நம்பிக்கையுடன் கோவில்களுக்குச் செல்லும் பதினாயிரக் கணக்கான ஹிந்துக்களும் (மாதா கோவில்களுக்கோ மசூதிக்கோ செல்வதனால் ஏற்படும்) அதே ஆன்மீகப் பலனைப் பெறுகிறார்கள். ஹிந்துக்களுக்குக் கோயில் இல்லையாயின் வாழ்க்கையிலேயே மகோன்னதமாகக்

---

* 10. 736.

கருதும் பொக்கிஷத்தை அவர்கள் இழந்தவர்களாகி விடுகிறார்கள். கோயில்கள் ஹிந்து சமயத்தின் ஒரு முக்கியமான அம்சம் என்பதே எனது உறுதியான கொள்கை.''

ஆனால் நாம் கோவில்களில் வழிபடுவது எதை? ''நாம் வழிபடுவது கல்லை அல்ல. கல்லிலும் உலோகத்திலும் செய்யப்பட்டுள்ள விக்கிரகங்களிலிருக்கும் கடவுளையே வணங்குகிறோம்.'' இதன் விளக்கம் என்ன?

மேலே வந்த கருத்தை விடையாகப்பெற கேள்வி கேட்ட பாதிரியார் மேலே சொன்னார்:

''கிராம வாசிகள் கற்களையே கடவுள் என்று பூஜிக்கிறார்கள்.'' அதற்குக் காந்திஜி அவர்கள் அளித்த விடை: ''இல்லை இல்லை அவர்கள் கடவுளை மாத்திரமே பூஜிக்கிறார்கள். கடவுளுக்குக் குறைந்த எதையும் அவர்கள் பூசிப்பதில்லை. கன்னி மேரியின் முன் முழந்தாளிட்டு வணங்கும் போது நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அவர் மூலமாகக் கடவுளுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்றே நீங்கள் கோருகிறீர்கள். அதே போல ஒரு ஹிந்து கல் சிலையின் மூலம் கடவுளுடன் தொடர்பு கொள்ள முயலுகிறார்.''

வைஷ்ணவர்கள் சிலையையே விஷ்ணுவின் அர்ச்சாவதாரம் என்று சொல்லி அதையே விஷ்ணு என்று வழிபடுகிறார்கள். இதைப்பற்றி காந்தி அடிகள் கருத்துச் சொல்லவில்லை. ஆனாலும் முரண்படுவது போல இருக்கிறது.

ஆனால் செய்கைக்கு விளக்கமான கருத்தில் தூய்மை இருக்கும் போது அதை அவர் எதிர்க்கவில்லை. கெடும்

---

10 - 1957

10 - 197

போது அவர் எதிர்க்கிறார். அதைப்பற்றித் தெளிவாக கோவிலைப்பற்றிப் பேசும் போதும் மரங்கள் கற்களை வழிபடுவதைப்பற்றிப் பேசும் போதும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

எனவே கோவில், விக்கிரக வழிபாடு (அது கல், மரம் எதுவாயிருந்தாலும் சிறந்த முறையிலும் தூய்மையானதாகவும் இருந்தால்) தேவைப்படுகிறவர்களுக்கு மிகவும் அவசியமே.

8. வினைகள்-பயன்கள்-மறுபிறவி

ஹிந்து சமயத்தில் மிகவும் தாக்குதலுக்கு இலக்காகி-யிருக்கிற பிரச்னை இது. காரணம்: இந்தக் கருத்து மிகத்-தவருன முறையில் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதே-யாகும். சிந்தித்தால் இது மிகவும் தெளிவானதும் சிக்கலில்லாததுமான கருத்து. ஆனால் அதில் மறதிக்கும் அறியாமைக்கும் அதிக இடம் இருந்துவிடுவதனால் இடையிலே அநேக தவருன கற்பனைகள் சேர்ந்து விடு-கின்றன. குழப்பமும் பொருந்தாச் செய்திகளும் இடம் பெற்று விடுகின்றன.

வினைகள் என்ருல் செயல்கள். ஒவ்வொரு செய-லுக்கும் முன்னால் ஆவல், அதற்கான திட்டம் இரண்டும் நாம் காணும் முறையில் உள்ளன. பிறகு செயல்கள் நிகழ இச் செயல்களுக்கு விளைவுகளும் அவை தரும் இன்ப துன்பமும் இருக்கின்றன. இத்துடன் வட்டம் முடிவ-தில்லை. இந்த இன்ப துன்பத்தின் அடியாக மறுபடியும் ஆவல்கள் (Desires) எழுகின்றன. அப்படி எழும் பல ஆவல்கள் மனிதன் உள்ளத்துடன் விதை உருவில் ஒட்டிப் பிறவி பிறவியாக அவனைத் தொடர்கின்றன. அந்த சூக்கும நிலையில் வித்துப் போல் இருக்கும் அவற்றிற்கு வாசனை என்று பெயர்.

இப்பொழுது இதில் மீண்டும் ஒரு கருத்தைப் பார்க்க வேண்டும். வினைகளுக்கோ விளைவுகளுக்கோ இன்பமோ துன்பம் தரும் சக்தி கிடையாது. அவற்றிற்கு மனித மனம் தரும் பொருளின் முறையில்தான் இன்பம் துன்பம்

உண்டு. அவன் வினைக்கு ஒரு விளைவை எதிர்பார்த்து அதை இன்பம் என்றோ துன்பம் என்றோ கணிக்கிறான். பிறகு விளைவுகள் நிகழாமலோ, நிகழ்ந்தோ அல்லது எதிர் பாராத வகையில் நிகழ்ந்தோ விடும்போது அவன் அதன் இன்பம் அல்லது துன்பத்தை ஏற்றுக் கொள்கிறான். இந்த எதிர்பார்த்தல், ஏற்றுக் கொள்ளல், விளைவு தரும் கற்பனை இன்பத்தை நாடி முயலல்: இங்கேதான் மனிதன் செய்யும் அசட்டுத் தனம் இருக்கிறது. அவன் அவற்றை ஏற்றுக் கொள்ளக் கொள்ள வாசனைகளின் சேர்க்கை அதிகரித்துக் கொண்டே போகும். இந்த வாசனைகள் என்பன முன் செய்த வினைகளின் சூக்குமப் பதிவுகள். கிராமபோன் தகட்டில் பாட்டில் பதிவு ஏற்பட்டிருப்பது போல் இவை ஜீவனில் பதிந்திருக்கின்றன.

இந்த விளைவுகள் மூன்று வகையானவை. சில உடனே விளைவுகளை ஏற்படுத்தும் நிலையில் கனிந்து நிற்பவை. சில, வருங்காலத்தில் பலன் தர நிற்பவை. சில நாம் செய்யும் செயல்களின் மூலம் நம்மை வந்து ஒட்டிக் கொள்ளத் தயாராய் இருப்பவை. வினை அறுத்தல் என்றால்

1) விளைந்த வினைகளின் பயனை நடக்க விட்டு
2) இனித்தர இருக்கும் வினைகளை பக்தியால் தீய்த்து விட்டு
3) இனிமேலே வினைகள் ஏற்படாமல் உலகில் செயலாற்றல் வேண்டும்.

பிறவி எடுப்பது இந்த வினைகளை நடத்தி ஒழிக்கவேதான். அதை ஒழிக்க முயலும்போதே அட்டை போல் வாசனையாக ஒட்டிக்கொள்ளக்கூடிய குணம் கர்மத்துக்கு இருப்பதால்தான் வாழ்க்கையை கெட்டிக் காரத்தனமாக வாழவேண்டும் என்று வேதாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன. ''கர்மங்களில் கெட்டிக்காரத்-

தனம் தான் யோகம்'' என்று கீதை கூறுகிறது. அதைத்தான் காந்தி அடிகள் ''அனுசக்தி யோகம்'' என்றார். கீதையின் விளக்கவுரையையே அந்தப் பெயர் வைத்துத் தான் வெளியிட்டார்.

செயலின் விளைவுகளுக்கும் மனிதன் முழுப்பொறுப்பல்ல. அதேபோல் ஆவலுக்கு அவன் இப்போது பொறுப்பல்ல. என்றாலும் அவன் முன்பே செய்தவினை தான். எனவே விளைவுக்கு ஆசையையும் அதற்காக செய்கையில் பற்றையும் விட்டானானல் இந்த நச்சு வட்டம் அற வழி பிறக்கிறது.

எனவே பிறப்பறுக்க வாசனைகள் தொலைய வேண்டும். வாசனைகள் தொலைய ஆவல்கள் அழியவேண்டும். ஆவல்கள் செயல்கள் மூலம்தான் அழியும். செயல்கள் அழிந்தால் பிறப்புத் தீரும். நல்வினைகள் தீவினைகள் இரண்டுக்குமே பந்தம் உண்டு. ஆனால் நல்வினைகளுக்குத் தீவினைகளைவிட ஆவலை அழிக்கும் குணம் அதிகம். எனவே நல்வினைகள் ஆற்றி ஆவல்கள் அழித்தல் எளிது.

வாசனைகளுக்கு வினைகள் ஆற்றத் தூண்டும் சக்தி உண்டே தவிர நல்வினை, தீவினைகளாக மாற்றும் சுதந்திரம் மனிதனுக்குத்தான் உண்டு. உதாரணமாகப் பாட்டுக் கேட்கும் ஆவலை பக்திப்பாடல்கள் கேட்டுக்களித்துக் கொள்ளலாம். அதனால் நற்பலன் உண்டு. அதாவது மனது அமைதி அடையும்; மீண்டும் அலைகள் எழாது.

இதன் மூலம் பிறவிக்குக் காரணம், நற்செயல்கள், தீவினைகள் வினைப்பயன் முதலியவை என்பது தெளிவாகியிருக்கும்.

* மற்றொரு ஜன்மத்திலும் பல பிறப்புகளின் மூலம் கர்மபலன்கள் தொடருகின்றன என்பதிலும் எனக்கு

---

* 10 - 151

நம்பிக்கை உண்டு. இங்கே நாம் விதைப்பதை மற்ருேரிடத்தில் அனுபவித்தே தீர வேண்டும், இதிலிருந்து யாரும் தப்பவே முடியாது.''

''எனினும் மரணப்படுக்கையில் இருக்கும்போது கூட ஒருவர் தாம் செய்த பாவத்திற்காக வருந்திஞல் அவரது வருத்தமானது பாவத்தை எரித்து அதன் தீய பலன்களைச் சக்தியற்றுப் போகும்படி செய்கிறது'' என்று விளக்கியிருக்கிருர் காந்தி அடிகள்.

இந்தக் கர்மவினையின் போக்கைத் தான் விதி என்று அழைக்கிருேம். விதி என்ருல் சட்டம். கர்மங்களைப்பற்றிய மாருத ''சட்டங்களையே'' விதி என்று அழைக்கிருேம்.

''அது மிகவும் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட ஒரு சொல். விதியின் நற்பயன்களையும், தீயபலன்களையும் பற்றற்ற முறையில் ஏற்றுக் கொள்வதுதான் விதியின் விபரிதமான பலன்களைச் சமாளித்து வெற்றி பெறும் வழி. விதி ஏற்கனவே நடந்துவிட்டதனுடைய தவிர்க்க முடியாத பயன். அது ஒருபாதிதான் மற்ருெரு பாதி இப்பொழுது நாம் செய்யும் கர்மங்களைப் பொறுத்திருக்கிறது. அது நம் கையிலிருக்கிறது. நம்மை ஏழையாக்கலாம் விதி. ஆஞல் திருடஞக்காது. அதைச் சிலசமயம் புரிந்து கொள்வதற்கு புருஷார்த்தம் என்கிருேம். முயற்சி என்ருர் வள்ளுவர். ஊழையும் வெல்லும் அது என்றும் சொன்ஞர்.

விரதங்கள்

இதுகாறும் சொல்லிவந்ததிலிருந்து, 'மனிதப் பிறவி-யின் பயன் சத்ய தரிசனமே. வாழ்க்கை அதை அடையும் முயற்சியாக இருக்கவேண்டும். அதற்குக் கருவியாகக் கிடைத்திருப்பது உடல், பொறிகள், அவற்றின் செய-லாற்றும் தன்மை; இடமாகக் கிடைத்திருப்பது உலகம். எனவே உலகை விட்டு உடலால் ஒதுங்காமல் செயல்களை உலக நன்மைக்காகச் செய்து உலகை விட்டு உள்ளத்தால் கடவுள் கருத்தின் நிழலில் ஒதுங்கிப் பழகிக் கொண்டால் பிறவிப்பயன் கிட்டிவிடும்'' என்பது தெளிவாகியிருக்கும்.

இந்த நற்பணி சில விரதங்கள் இல்லாமல் முடியாது. விரதங்கள் என்பது, 'கண்டிப்பாய் எந்த நிலையிலும் இவ்விதம் செய்வேன். அவ்விதம் செய்யமாட்டேன்' என்று ஏதாவது ஒரு சாட்சி கெதிரே எடுத்துக் கொள்ளும்' உறுதி. கடவுளையே சாக்ஷியாக ஏற்றுக்கொள்வது சாலச் சிறந்ததாகும்.

நம் சமயத்தில் இயமங்கள் என்று ஆன்ம முன்-னேற்றத்துக்காக அஹிம்ஸை, ஸத்யம் அஸ்தேயம், பிரம்மச்சரியம் அஸங்கிரஹம் என்ற ஐந்தையும் விரதங்-களாக வைத்திருக்கிறார்கள்.

அடிகள் தேசசேவைக்காக, சரீரச்ரமம், அஸ்வாதம், சர்வத்ரபயவர்ஜனம், சர்வதர்ம சமானத்வம், ஸ்வதேசி, ஸ்பரிச பாவனை என்ற ஆறையும் சேர்த்து பதினொரு விரதங்களாக ஆக்கிக்கொண்டார்.

காந்தி அடிகள் தேச சேவையை ஆன்மீகத்துக்கு உதவும் வழியாகவும் தேச சேவைக்கு அரசியலை வழியாக-வும் ஏற்றுக் கொண்டிருந்தார். அப்போது அவருக்கு இந்தப் பிரதிக்ஞைகளின் தேவை ஏற்பட்டது. எனவே பொதுவாக தேசத்திலுள்ள எல்லோருக்கும் சிபாரிசாகவும் ஆசிரமத்தில் தன்னுடன் சேர்ந்து பணியாற்றுகிறவர்-களுக்கு இன்றியமையாதனவாகவும் நிபந்தனையாகவும் விதித்தார்.

*பிரதிக்ஞை பின் வாங்காத உறுதியான தீர்மானமே. நாம் கவர்ச்சிகளுக்கு இலக்காகி விடாமல் அது நம்மைக் காக்கிறது.

முதலில் சோதனை ஏற்படும். நம் மனதே அசௌகரியங்கள் இருந்தால் காட்டி, இல்லாவிடிலும் சிருஷ்டி செய்து காட்டி, நம்மைக் குலைக்க முயற்சி செய்யும்.

இந்தப் பிரதிக்ஞை அல்வது விரதம் கடினமாகத்தான் இருக்கும். இல்லாவிட்டால் விரதம் அல்லது பிரதிக்ஞை என்று சொல்வானேன்? அவர் †"பிரதிக்ஞையைக் கைவிடுவதைக் காட்டிலும் உயிரை விட்டுவிடுவதே மேல். அப்படி விடுபவன் உதாரணம் உலகுக்கே நல்லதாய் விளையும்." என்று கூறி இதன் பெருமையை விளக்க, 'பிரதிக்ஞையின் உருவே கடவுள்' என்று சொன்னார்.

பிரதிக்ஞை அடக்கத்துக்காகவும், தன் மனதின் ஆற்றலை அதிகரித்துக் கொள்வதற்காகவும், உடலை இந்த உலகுக்கு உதவும் வகையில் பயன்படுத்தவும், இறுதியாக ஆன்ம விடுதலைக்காகவும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இனி இவற்றைப் பற்றிச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

1. அஹிம்சை : உடல் எடுத்தவன் ஹிம்சை செய்வது ஓரளவு இன்றியமையாததாகப் போய்விட்டிருக்கிறது. ஆனால் ஆத்மாவின் தன்மையோ அஹிம்சையே. அன்பின் வழியது உயிர் நிலை என்பது குறள். இந்த இரண்டிற்கும் போராட்டம் ஏற்படத்தான் ஏற்படும். உயிர் தன் உண்மையை எய்த முயலுவதும் அதை உடலின் விகாரங்கள் தடுப்பதுமான இந்தப் போராட்டத்தில் அஹிம்சையை பிரதிக்ஞையாக எடுத்துக் கொள்வது

* 10 - 290 †10 - 291

மிகவும் தேவை. தவிர தொண்டு செய்கிறவன், சத்தியம் காண முயலாமல் தொண்டு செய்ய முடியாது. சத்தியத்தை அன்பு வழி இன்றி தேடமுடியாது. அஹிம்சை என்பதற்கு அன்பு, கருத்து உருவம்; தொண்டு, செயலுருவம்; இரண்டும் விரிவடைந்து பிரபஞ்சத்தையே அணைக்க வேண்டும்.

2. சத்யம் : சத்தியமும் அஹிம்சையும் ஒன்றை ஒன்று தழுவியது. சத்யம் அஹிம்சைக்குத் தேவை. அஹிம்சை இல்லாமல் சத்ய நாட்டம் பயனுறாது. அடிகள் சத்யம்தான் கடவுள் என்றார் அந்தச் சத்தியம் சற்று 'நாணமுள்ள பெண்'. தொட்டாற் சுருங்கி. ஹிம்சை இருக்கிற இடத்தில் ஒளிந்து விடுவாள். தோற்றம் தரமாட்டாள். படாடோபத்தில் கண் கூசுவாள். எனவே உண்மை தேட அஹிம்சை வேண்டும். அஹிம்சை சத்யத்தைத் தொட வேண்டும்.

3. அஸ்தேயம் : அதாவது திருடாமை என்று பொருள். சட்டம் கண்டிக்கிற முறையில் திருடுவதை இது குறிக்கவில்லை. அங்கே சொந்தம் கொண்டாட ஒருவர் இருக்கிறார். பல சமயங்கள் அப்படி உரியவர் என்று ஒருவர் இருப்பதில்லை. அப்போது எதை எடுத்தால் திருட்டு என்று நாம் நினைப்பதில்லை. அதனால் இதற்கும் பொருள் கொள்ளும்போது நம்முடையதல்லாத ஒன்றை அதாவது நமக்குத் தேவையில்லாத ஒன்றை எடுத்துக் கொள்ள முயல்வது, திருட்டு என்று பொருள் கொள்ள வேண்டும்.

உணவு உடையிலும் கூட 'எனக்குத் தேவையில்லாததற்கு மேல் அதிகமாக எடுத்துக் கொள்வது திருட்டு' இந்தத் 'தேவை' என்னும் விஷயத்திலும் கூட கவனமாக இல்லை என்றால் 'தேவை'யே திருட்டாகி விடும். இதற்குச் சாதனைக் கல் நேற்றுக்கு இன்று தேவையைக் குறைத்—

தோமா? என்று எப்போதும் சிந்தனை செய்து பார்க்க வேண்டியது தான். அப்போது அபரிக்ரஹம் வரும்.

அப்படி எண்ணும் ஒருவன் அதிகம் சம்பாதிக்க மாட்டார். எதிர் காலத்துக்காகச் சேமித்துக் கூட வைக்கப் பட்டால் அப்போது வருகிறது:

4. அஸங்க்ரஹம்: இது முன் விரதத்தின் அடுத்தபடி- தேவையில்லாததை எடுத்துக் கொள்ளவே வேண்டாம் என்ற போது சேர்த்து வைக்கிற, குவிக்கிற பேச்சு அடி. பட்டுப் போகும் ஆனால் வருங்காலத்திற்காகச் சேர்க்கி றேன் என்ற பேச்சும் கூடாது.

5. பிரமசரியம்: இந்த விரதம் தான் சத்தியத்துக்கு அடிப்படையானதேவை. பிரமசரியம்என்பது பெண்களுடன் கொள்ளும் குழந்தை பிறப்பதற்கான உறவை நீக்குதல் என்று சரியாகவே பொருள் கொள்ளப்பட்டிருந்தாலும் 'பிரமத்தைக் காண, பிரமமாக மாறும் வழி என்று தான் பொருள். எனவே இது புலனடக்கம், நாவடக்கம். உண்மை, அன்பு எல்லாவற்றையுமே அண்டிநிற்கும் = அனைத்தும் நிற்கும்.

இனியுள்ளவை புரிந்து கொள்ள எளிமையானவை. ஆனால் அவை தேவைப்பட்டதற்குக் காரணம் உண்டு.

6) சரீரச்ரமம்: யோக வழியில் செயல்கள் பேசப்பட்- டாலும் உடலுழைப்பைப் பற்றி மறந்து விட ஏது- விருந்தது. கடவுளுக்கு பூசை செய் என்றல் பூவையும் பழத்தையும் நாமே உற்பத்தி செய்ய வேண்டும் என்ப- தில்லே. எனவே ஸ்தூலப் பொருள்களை உற்பத்தி செய்யும் செயல் மட்டமானதாகக் கருதப்பட்டு பிறர் உற்பத்தி செய்ததைப் பயன்படுத்தியே நான் கதியடையலாம் என்று கருத்து சமூகத்தில் பரவி விட்டது. எனவே பூவை உற்பத்தி செய்தவனை விட பூவைக் கடவுளுக்குச்

சார்த்தியவன் உயர்ந்து விட்டான். அரிசி விளைவிப்பவனை விட அதை விலைக்கு வாங்கிச் சாப்பிட்டவன் மதிப்புப் பெற்று விட்டான். இந்தப் பிரிவு; ஏற்றத் தாழ்வு இரண்டையும் நீக்க இந்த விரதம் தேவை.

7) அஸ்வாதம்: நாவிற்கு அடிமையாவது தான் தனி மனிதனுக்கு ஏற்படும் அநேக மன, உடல் நோய்களுக்குக் காரணம். ருசிக்காகச் சாப்பிடும் பழக்கம் போய் உடல் நலத்துக்குச் சாப்பிடும் பழக்கம் வேண்டும். இன்னும் சிலர் குறிப்பிட்ட உணவு கிடைக்கவில்லை என்றால் அப்படியே நொடிந்து போவதைப் பார்க்கிறோம். அவர்களால் யாருக்கு என்ன தொண்டாற்ற முடியும்?

8) சர்வத்ரபயவர்ஜனம்: அஞ்சாமை. அஞ்சாமை உடன் பிறந்த குணமாக இருக்கவேண்டியதுதான். ஆனால் அதை வெளிக்கொணர உறுதிதேவை. அஞ்சுவது அஞ்சாமையும் ஒருவித அச்சமே. மானம் போகும், பணம் போகும், சுகம் போகும் என்ற அச்சங்களே உண்மை வழி நடப்பவனுக்கு எதிரிகள். எனவே உறுதி பூண்டு அஞ்சாமையை வளர்க்கவேண்டும்.

9) சர்வதர்மசமானத்வம்: சர்வசமய சமரஸம். ஹிந்து மதம் மட்டுமே பரவியிருந்த காலத்தில் இந்த விரதத்துக்குத் தேவையில்லை. ஹிந்து மதத்திற்குள்ளேயே பல சம்பிரதாயங்கள் வந்தவுடனேயே இதற்குத் தேவை ஏற்பட்டுவிட்டது. மேலும் பல மதங்கள் நம் நாட்டில் வந்து தங்கிவிட்டபிறகு இதற்கு மிக மிகத் தேவை ஏற்பட்டு விட்டது. இது இல்லை என்றால் நாட்டின் முன்னேற்றம் மட்டும் தடைபடாது; துவேஷம், கோபம் அழிவுப்போக்கு காரணமாக நம் ஆன்ம முன்னேற்றமும் தொலைந்து விடும்.

10) ஸ்வதேசீ : சுதேசி உணர்வு. இந்தியா விடுதலை அடையமட்டும் இல்லை; முன்னேற்றம் பெறவும் மிகவும் இன்றியமையாதது இது.

11) ஸ்பர்சபாவனா. இந்து மதம் தனி மனிதன் தனியே சாதனை செய்து நற்கதியை அடைவதைமட்டும் குறிக்கோளாகக் கொண்டிருந்தால் இது தேவையில்லை. அதனால் தொட்டாலே தீட்டு ஒட்டிக்கொள்ளும். பார்த்தாலே சுத்தம் பறிபோம் என்பது சரிதான் என்று பொதுவாகச் சொல்வதாகக் கருதக்கூடாது.

சமூகத்தையே எண்ணி அமைப்புக்களைப் பேசியபிறகு தொடக்கூடாது என்ற உணர்ச்சி ஆன்மசாதனையின் வலிமையே கெடுத்துவிடும். தவிர நாட்டு நலனுக்கும் இது கேடாக இருந்தது. எனவே இந்த விரதம் தேவைப் பட்டது.

இந்த விரதங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு கடைப்பிடித்தால் நல்லது.. முதலில் முடியா விட்டாலும் ஒவ்வொன்றாக சேர்த்துக் கொண்டுகொஞ்சம் கொஞ்சமாவது முன்னேற வேண்டும்.

10 வழியும் முடிவும்

காந்தி அடிகள் Ends justify means — அதாவது வழி, துறை எப்படியானுல் என்ன லக்ஷியம் நிறைவேறிற்ரு இல்லையா? என்று சொல்லும் வாதத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அவர் முடிவு நல்லதாயிருக்க வேண்டுமானுல் வழியும் நல்லதாக இருக்க வேண்டும் என்ருர். அல்ல — வழி நல்லதாயிருந்தால்தான் முடிவும் நல்லதாக இருக்கும் என்ருர். இதை எல்லாம் விட உள்ளபடி முடிவை வழிக்கும் அதன் தூய்மைக்கும் விட்டு விட்டு வழியின் தூய்மைக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தார் என்பதே மிகவும் பொருந்தும். இதைப்பற்றி திலகர் அவர்களுக்கு பதில் போன்றவை தவிர ஒரு முழுக்கட்டுரையே காந்தி நூல்களில் முதல் தொகுப்பு 8ம் தொகுப்பு இரண்டிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையே சற்றுச் சுருக்கிக் கீழே கொடுக்கிறேன்.

வாசகர்: நல்லதான ஒரு லட்சியத்தை எந்த வழியிலாவது பலாத்காரத்தைக் கொண்டாகிலும் ஏன் நாம் அடையக் கூடாது? வீட்டுக்குள்ளே இருக்கும் ஒரு திருடனைச் சமாளிக்க வேண்டியிருக்கும் போது கையாள எந்த முறை நல்லது என்று நான் சிந்திக்க வேண்டுமா? மனுச் செய்து கொள்வதனுல் எதையும் நாம் அடைந்து விடவில்லை (விடுதலைப் போராட்டத்தில்) அடைந்து விடவும் முடியாது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வதாகத் தோன்றுகிறது. அப்படி இருக்க மிருகபலத்தை உபயோகித்து நாம் ஏன் அப்படிச் செய்யக் கூடாது? மேலும் அடையப் போவதைக் காத்துக் கொள்ளுவதற்கும் அவசியமான அளவுக்குப் பலத்தை உபயோகிக்க முடியும்

என்ற பயம் இருக்கச் செய்ய வேண்டும். ஒரு குழந்தை தீயில் காலை விட்டுவிடாமல் தடுப்பதற்கு தொடர்ந்து பலவந்தத்தை அனுசரிப்பது குறித்து நீங்கள் குற்றம் கூற முடியுமா? எப்படியாவது நாம் நமது லட்சியத்தை அடைந்தாக வேண்டும்.

ஆசிரியர்: உங்கள் நியாயம் வெளிக்கு நன்ருகவே தோன்றுகிறது. இது பலரைத் தப்பான வழியில் செலுத்தி இருக்கிறது. இதற்கு முன்னுல் நானும் இந்த வாதத்தை உபயோகித்து வந்தேன். ஆனுல் இப்பொழுது நன்ருகப் புரிந்துகொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன்.

முதல் உதாரணம்: ஆங்கிலேயர் மிருகபலத்தை உபயோகித்தே லட்சியங்களை அடைந்திருக்கிருர்கள். நாம் ஏன் அடையக்கூடாது என்பது. பதில்: அவர்கள் அடைந்ததை நாம் விரும்பவில்லை. விஷப்பூண்டை நட்டு விட்டு ரோஜாமலரை அடையலாம் என்பது போன்றது இந்த வாதம். லட்சியத்துக்கும் முறைக்கும் சம்பந்தமில்லை என்று தெய்வபக்தியுள்ளவர்கள் கூட நம்பினுர்கள். ஆனுல் அது தவறு. கப்பல் கொண்டு தாண்ட வேண்டிய நதியை வண்டியைக் கொண்டு தாண்ட முடியாது. விதைக்கும் மரத்துக்கும் உள்ள தொடர்புதான் முறைக்கும் லட்சியத்துக்கும். சைத்தானை அடிபணிந்து கடவுள் அருளைப் பெறமுடியாது. இந்த மனப்பாங்கின் காரணமாக ஆங்கிலேயர்கள் 1833ம் உரிமைக்குப் பலாத்காரம் காட்டி வாக்கு உரிமையைப் பெற்ருேர்கள். கடமை காற்றில் விடப்பட்டது. அதனுல் உரிமைக்கேற்ற கடமையைச் செய்யாததனுல் உரிமையே சுமையாக இருக்கிறது.

உங்கள் கடிகாரத்தை நான் பறித்துக்கொள்ள விரும்பினுல் 1) போராடிப் பெறவேண்டும் 2) விலைக்கு வாங்க விரும்பினுல் பணம் கொடுக்க வேண்டும்.

3) இனுமாக விரும்பினுல் கெஞ்சிக் கேட்க வேண்டும். எனவே லட்சியத்துக்கு என்ற ஏற்றவழி இருக்கிறது. முறைக்கேற்றவாறுதான் பயன் இருக்கிறது. முறையைப் பற்றி எப்படிப் பேசாமல் இருக்கமுடியும்.

இரண்டாவது உதாரணம் : திருடனை விரட்டுவது. அதற்குச் சமாதானம் : திருடன் வந்தது என் தந்தையா–யிருந்தால், தெரிந்தவராயிருந்தால், தெரியாத புதியவராயிருந்தால், மூன்று சந்தர்ப்பங்களிலும் ஒரே முறையை உபயோகிக்க முடியாது. ஆயுதபாணியாக இருந்தாலோ சும்மாவே இருந்து விடுவேன். எனவே பலதரப்பட்ட முறைகள் இருக்கின்றன. மீண்டும் பார்க்கலாம்.

என் தந்தை ஆயுதபாணியாகத் திருட வந்திருந்தால் அவர் பலம் என்னை அழத்தூண்டும். புதியவனின் பலமோ எனக்கு கோபத்தை உண்டாக்கும். நாங்கள் சத்-துருக்களாவோம். எனவே பல முறைகள் இருக்கும்போது முறைக்கேற்ற பலன் தான் கிட்டும் என்றபோது நான் என் அஹிம்சை முறையையே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்துவேன். நீங்கள் விரும்புகிறபடி எந்த முறையையும் நீங்களும் கையாள முடியாது என்பதும் உங்களுக்குத் தெரியும்.''

காந்தி அடிகள் திருடன் உதாரணத்தைத் தொடர்ந்து விளக்குகிருர். ஆயுதபாணி ஒருவன் உங்கள் சொத்-தைத் திருடுகிருன். உங்களுக்குக் கோபம் மூள்கிறது. நீங்கள் உங்கள் நன்மைக்காக - கிராமத்தின் மற்றவர் நன்மைக்காகக் கூட – அவனைத் தண்டிக்க விரும்பு-கிறீர்கள். கிராமத்தாரைச் சேர்த்துக் கொள்கிறீர்கள். உங்கள் நன்மைக்காகத்தான் என்று கூறி அவர்களுக்கு உங்கள் செலவிலேயே ஆயுதங்கள்கூட வாங்கிக் கொடுக்-கிறீர்கள். திருடனும் கூட்டுச்சேர்த்துக் கொண்டுவிடவே

திருடர்களுக்கும் உங்களுக்கும் போர் மூள்கிறது. அப்போது கிராமத்தார் சொல்கிறார்கள். நீங்கள் போர் தொடங்குவதற்கு முன் எங்களுக்கு இந்த அல்லல் இருந்ததில்லை. அப்போது நீங்கள் உங்கள் நிலையில் அவர்களைத் தேற்றுவதற்கு அவர்களுக்கு நன்மை புரிவதாகச் சொல்கிறீர்கள். என் சொத்தே உங்களுடையது என்றெல்லாம் சொல்கிறீர்கள். உண்மையில் இது எங்கிருந்து தொடங்கிற்று என்றுபாருங்கள்.

இதற்கு மாற்று: மேலே சொன்னது ஒரு முறை. பிற முறைகள் இருக்கின்றன. ஆயுத பாணியான இத் திருடன் அறிவு கெட்ட உங்கள் சகோதரன் என்று எண்ணிப் பேசுங்கள். அப்போது அவனுக்கு இரக்கம் காட்டுவீர்கள் அவனை அழித்து விட விரும்பமாட்டீர்கள். பிறர் பலத்தைக்கூட அவனைத் திருத்துவதற்கே வேண்டிப் பெறுவீர்கள். மேலும் பார்க்கலாம். அவன் திருடுவதற்கே உதவியாக உங்கள் சன்னல் கதவுகளைத் திறந்து வையுங்கள். நீங்கள் இடம்மாற்றிப் படுத்துக் கொள்ளுங்கள். அவன் வந்து பார்த்துவிட்டுக் குழம்பிப் போவான். சாமான்களை எடுத்துக்கொண்டு போய்விட்டாலும்கூட அவன் நிம்மதியாக இருக்கமாட்டான். கோபமும் விரோதமும் இல்லாத காரணத்தால் அவன் உள்ளத்தில் நட்பும் நல்லெண்ணமும் வரத் தொடங்கும் கிராமவாசிகளிடமும் கேட்பான். வந்து உங்களிடமே மன்னிப்புக் கோருவான். உங்களிடமே வேலைக்காரனாகவும் வைத்துக் கொள்ளலாம். இது ஒரு முறை: இரண்டாவது முறை. இது நடக்கிறதா மனிதர்கள் ஒத்துக்கொள்வார்களா என்பதல்ல கேள்வி. இது நல்லமுறை. நல்ல முறையின் பயன் நல்லதாயிருந்தது என்று காண இது பயன்படும். மிருகபலம் உபயோகிப்பதில் தீமையுண்டு. அன்பு, அனுதாபம் இவற்றிற்குரியசக்தி வலிது, தூயது, தீமையற்றது.

மூன்ருவது : மனுச் செய்துகொள்ளும் விஷயம்.

பலத்தின் ஆதரவில்லாத முறையீடு பயனற்றது என்பது ஆட்சேபிக்க முடியாத உண்மை. முறையிட்டுக் கொள்ளுவதில் மக்களுக்குப் போதிப்பதற்கான உபாய-மிருப்பதால் அதிலும் பயன் உண்டு என்று ரானடே சொல்லி வந்தார். எனவே முறையீடு முற்றிலும் பயனற்-றது என்பதற்கில்லை.

சமமானவர்களுக்குள் முறையீடு கண்ணியத்தின் சின்னமாகும். அடிமையின் முறையீடோ அடிமைத் தனத்தின் சின்னம். (எனவே நம் முறையீட்டைப்பற்றி நாம் பெருமை கொள்ள முடியாதுதான்).

பலத்தின் ஆதரவோடு செய்து கொள்ளும் முறையீடு சமமானவர்கள் செய்து கொள்ளும் மனு. தேவைகளை மனுமூலம் தெரிவிப்பதில் ஒரு கண்ணியம் இருக்கிறது. எனவே பலம் தேவைதான்.

இந்தப் பலம் (1) ஆயுதபலம் (2) அன்புப்பலம் இரண்டாக இருக்கலாம்: ஆயுதபலத்துடன் செல்லும் போது மனுவுக்குச் செவிசாய்க்க விட்டால் உங்களுக்குத் துன்பம் செய்வோம் என்று சொல்ல வேண்டும். ஆயுத பலம் கெடுதல் என்று சொல்லி வருகிறேன். (அதற்கு காரணங்கள் ஏராளம் காட்டியிருக்கிருர். அவர் வாழ்க்கையே ஒதுக்கும் வாழ்க்கைதானே).

அன்பு பலத்துடன் சொல்லும் போது நீங்கள் எங்கள் கோரிக்கைகளுக்கு உடன்படாவிட்டால் மேற்கொண்டு மனுச் செய்து கொள்பவர்களாக இருக்க மாட்டோம். நாங்கள் ஆளப்படுபவர்கள் என்ற உறவை ஏற்றுக் கொள்கிறவரையில்தானே நீங்கள் ஆள முடியும். இனி உங்களுடன் எந்த உறவும் கிடையாது என்று சொல்லி

நம் அன்பு பலத்தின் மூலம் சத்யாக்ரஹம் அல்லது சாத்வீக எதிர்ப்பைக் காட்டுவோம். அதன் முன் ஆயுத பலம் குன்றிப் போகிறது.

நான்காவது: குழந்தை தீயில் காலை நீட்டுகிற உதாரணம். இதுவும் உங்களுக்கு பயன்படாது. உங்களால் ஒன்றும் செய்ய முடியாத அளவுக்கு அது தன் உடல்பலத்தை உபயோகித்து விட்டால் நீங்கள் என்ன செய்ய முடியும்? இதற்குப் பரிகாரம் இரண்டேதான்: தீயில் நாசமாக முடியாமல் நீங்களே கொன்றுவிட வேண்டும் அல்லது நீங்கள் தீயில் விழுந்து அதைக் காப்பாற்ற வேண்டும். நீங்கள் தீயில் விழும் அளவுக்கு அனுதாபம் இராவிட்டால் நடப்பது என்ன? குழந்தை இரையாக வேண்டியதுதான்.

நான் ஆங்கிலேயர்களைக் குழந்தையாகக் கருது-கிறேன். அவர்கள் தீயில் பொசுங்காதவாறு காக்க வேண்டும் என்கிற உங்கள் நல்லெண்ணம் அளவிட-லாகாத இரக்கமாக மாறி அதை உங்களையே தியாகம் செய்து கொள்ள உபயோகிக்கும்படி அழைக்கிறேன்.

எனவே வழி எதுவானால் என்ன? என்ற கேள்விக்கே இடமில்லை. வழி தீதாயிருந்து முடிவு நலமாயிருந்தால் அது தோற்றமே, பொய்மை என்றுமே புரை தீர்ந்த நன்மையாக ஆனதில்லை. ஆகமுடியாது; அது வாய்மை-யிடத்தாகும் என்று நம்புவதற்கு.

எனவே லட்சியத்தை நாம் நல்லது என்று ஏற்று அதைக் குறிக்கோளாகக் கொண்டு முயலும்போது முயற்சியின் முறைகளின் தூய்மையை மறக்கக்கூடாது. இது காந்தி அடிகள் தீவிரமாக நம்பிய கொள்கை.

அதன் பலனை நாம் ஆங்கிலேயர் இந்தியர் உறவின் இனிமையில் காண்கிறோம். அன்றுட வாழ்விலும் காண முடியும்.

முடிவுரை

இதுவரை சொல்லப்பட்டவைகள் காந்தியடிகளின் சமயக் கொள்கைகளைப் பற்றிப் புரிந்து கொள்ள உதவி யிருக்கும் என்று நம்புகிறேன். அத்துடன் சமய வாழ்வு தான் உண்மையான வாழ்வு என்று அறிந்து கொள்ளவும் பயன்பட்டிருக்கும் என்றும் நம்புகிறேன்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டியிருந்ததனாலும், கருத்துக்கள் மிகவும் ஆழ்ந்தவையானபடியாலும், அநேக இடங்களில் முழுத்தெளிவும் ஏற்படாமல் போய்விட்டிருக்க வாய்ப்பு உண்டு என்று உணருகிறேன்.

ஆனால் சமயம் வாழ்க்கை முறை வெறும் கருத்துக் களின் தொகுப்பு அல்ல. எனவே முறையைப் புரிந்து கொண்டு நடந்து அதைத் திறமையுடன் கைக்கொண்டு வளப்படுத்தத் தொடங்கினேமானால் தானே புரிந்துவிடும். ஜிலேபியின் தித்திப்பு இலக்கண விரிவுரையினாலோ, ஒப்புமை விளக்கங்களாலோ புரிந்துவிட்டது என்பதாகி விடாது. வாயில் போட்டுக் கொண்டால் உடனே தெரிந்து விடும்.

மேலும் காந்தி அடிகளின் பேச்சுக்கள், எழுத்துக்கள் எல்லாம் நிரம்ப நூல்களாக வெளிவந்திருக்கின்றன. அவற்றை அடிக்கடி வாசித்தால் கருத்துக்குத் தெளிவு ஏற்படுவதுடன் பின்பற்றுவதற்கு ஊக்கமும் கிடைக்கும்.

அதற்கு இந்தச் சிறு நூல் ஒரு தூண்டுதலாக அமையு மானல் அது எனக்குக் கிடைத்த பெரும் பரிசாகும்.

MARA PUBLIC LIBRA
D̄ū-66